விலை 30/=
ISSN-2613-828X


# யாழ் களரி

வெளியீடு: ராகஸ்வரம் கலைமன்றம்
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்


077-6510375
www.yarlgallery.com
yarlgallery@gmail.com

உதயம்: 02 | புரட்டாதி 2019 | களரி: 19






## யார் எங்கள் BIGG BOSS



முல்லை நீராவியடிப் பிள்ளையார் வளாகத்தில்

# எரிந்தது நீதி

# சாம்பலாகியது தர்மம்




நீ உருவாகி பிறரை உருவாக்கு

## நம்பிக்கையைத் தொலைத்த நல்லாட்சியா?

வாக்குறுதிகள், காலக்கெடுக்கள், மறந்தவர்களா நமது நாட்டு தலைமைகள்? சொன்ன வாக்கு மறந்தவர்களானால் முன்னைய தேர்தல் வாக்குறுதிகள், விஞ்ஞாபனங்களில்



எதனை நிறைவேற்றி உள்ளார்கள் என்பதனை மீட்டுப் பார்ப்பதே நல்லது. புதுப்புது புழுகுமூட்டைகளைச் சொல்லி செல்லவும், யாழ் வந்து போனதும், தெற்கில் துவேசப் பேச்சுக்கள் இன, மத, குரோதக்கருத்துக்களைத் தூண்டிவிட்டு இலாபமடையும் அரசியல் தலைமை களால் மக்களிடம் நம்பிக்கையீனமே மிஞ்சுகிறது.

ஏப்ரல் 21ற்கு முன் சமாதான நல்லுறவு சகவாழ்வு எனக் கட்டியெழுப்பிய யாவும் சிதறடிக்கப்பட்டது குண்டுத் தாக்குதலால் மட்டுமல்ல குரோதப்பேச்சுக்களும், துவேசமூட்டும் அரசியல் தலைமைகளாலும் சர்வமத, சமாதான, நல்லிணக்க, சகவாழ்வு யாவும் சிதறடிக்கப்பட்டதே அதிகம்.

சமாதான சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள், விழிப்புணர்வுகள் இன்று அரச உத்தியோகத்தர்களைக் கொண்டு மண்டபத்தை நிறைத்து நடாத்தி விட்டோம் என அறிக்கையிடுகையுடன் நிறைவடைகிறதே தவிர மக்கள் பங்களிப்பேதுமின்றி கையொப்பத்திற் காகக் காத்திருக்கும் காரியாலய பணிகளே அதிகம். மக்களிடம் சென்றடையக் கூடிய விழிப்பூட்டல் திட்டமிடல் தொடர்பாடல் இன்றிய அரச மட்ட பணியாளர்களின் செயல்களில் அறுவடைகள் பூஜ்ஜியமாகவே உள்ளது.

## ஊருக்கு மட்டும் உபதேசமா?

"நாட்டைக்காக்க ஒன்றிணையுங்கள்" என்ற கோசம் போட்டு பேசிவரும் தலைமைகள் இது ஊருக்குத் தான் உபதேசம் தங்களுக்கல்ல என உரத்துக் கூறுவோர் தமது நிலைகளை ஏன் எண்ணிப் பார்க்கத் தயங்குகிறார்கள்?

வண்டிமாட்டு இரண்டும் ஒன்றாய் ஓட முடியாது விட்டால் எது, எப்போ தன் இலக்கை சென்றடைய முடியும்? முன்மாதிரியான குடும்பத்தால் தானே சிறந்து நல்லொழுக்க பிள்ளைகளை உருவாக்கலாம். அம்மா ஒரு பக்கம் அப்பா மறுபக்கம் இருந்து பிள்ளைகளை வழிநடாத்த முடியுமா? இது தானே நம்ம நாட்டு அரசியல் தலைமைகள் சமூகத்துக்கு முன் மாதிரியாக வழி காட்டுகிறார்கள் இதனை பாலர்கல்விப் பிள்ளை கூடப் புரியும் அளவிற்கு பொது சந்திப்பிலும், சீண்டிக் கொள்வதிலும் வழி காட்டும் தலைவர்கள், மூத்த குடிமக்கள் என தம்மைத் தாமே சொல்லிக் கொள்வோர் வெளிப்படுத்தி வரும் சிறுமை செயல்களாக்கிக் கொண்டு நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற



சொல்லை உச்சரிப்பதில் வாய்கூச்சம் கூட இல்லையா? ஊருக்கு மட்டுமல்ல உங்களுக்கும் தான் என்பதனை உணர்ந்து செயற்படுங்கள்.

# யார் எங்கள் "பிக்பாஸ்"



மக்கள் தெரிவில் எமது நாட்டு "பிக்பாஸ்" வாக்களிப்புக்கள் மூலம் தெரிவாக உள்ளார். அந்த பிக்பொஸ் போட்டியாளர் களின் சிறப்புக்களும் முன்னைய கால செயல்பாடுக ளும் மதிப்பீடு செய்யும் பொறுப்பும் மக்களின் கருத்துக் கணிப்புக்களும் எப்படி அமையப் போகிறது என்பதனை எமது நாட்டை விட வெளி நாட்டு பார்வைகள் கூர்மையாக உள்ளது. இவை தமது வெளிநாட்டுக்கு சாதகமானால் தமது தலையீடுகள், சுயலாபங்கள் தமது பொழுதுபோக்கு சூதாட்டமாக நமது நாட்டு அரசியல் கட்சிகளுக்கு ஊக்க மருந்து கொடுப்பதில் பல தூதுக்களை ஏவி விட்டவர்களாக இருக்க எமது மக்கள் அரசியல் தெளிவின்மையும், பரம்பரைத் துவம், முன்னைய மனப்பதிவுகளும், அலங்கார வார்த்தைகள், பொய் வாக்கு றுதிகள், வெளியார் செல்வாக்கு, கை மாற்று லஞ்சங்கள் பல வடிவங்களாகி சுயத்தை மறந்து போன வியாபாரிகள், அரசியல் தாசிகள் செயல்படாத விஞ்ஞா பன வாக்குறுதிகள், மறைமுக கொடுக்கல் வாங்கல்கள், மிரட்டல்களால் இறக்குமதி கட்சிகளும், இருக்கும் கட்சித் தலைமைக ளும் பிக்பாஸ் அரங்கில் நடமாட உள்ளன. வேட்பாளர்களின் கடந்த கால செயல்கள், தமிழர்மீது எத்தனையோ அழுத்தங்களுக்காக யாரும் குரல் கொடுத்தார்களா? தமிழரை அழிப்பதில்ஒன்றிணைந்து நின்றார்களா? முதலைக் கண்ணீருடன் வீட்டு வாசல்வரை வந்து நிற்கிறார்கள். அவர்களின் சுயத்தை ஆராய்ந்து உங்கள் உரிமை வாக்குகளால் பதில் அளியுங்கள்.எமது மக்களின் அவலங்கள், அதனால் ஏற்பட்ட தாக்கங்கள், அதற்கான முயற்சிகளுக்குத் தடையாய் இருந்தவர்கள் யார்?இனம் காணக் கிடைத்த சந்தர்ப்பமே எதிர்கொள்ளும் தேர்தலாகட்டும், உங்கள் வாக்குகளே பதிலளிக்கட்டும்.

**"எங்கள் பிக்பாஸ்சில் யாரை சிறையில் அடைப்பது? யாருக்கு எலிமினேசன் கொடுப்பது? யாரைக் காப்பாற்றுவது? உள்ளே சென்று கேள்விகளைக் கேட்கக் கூடியவர்களாக யார்?"**

வடக்கு, கிழக்கு இணைப்புக்குத் தடைபோட்டவர்கள் யார்? முள்ளி வாய்க்கால், நந்திக்கடல் உருவாக்கிய இழப்புக்கு காரணமானவர் யார்?அரச மத்திய வங்கி கொள்ளைக்கு துணை போனவர்கள் யார்?காணாமல் போனவர் களின் குரலுக்கு விடைகாக செவிமடுத் தவர்கள் யார்?சிறைக்கைதிகள் விவகா ரத்தில் விடுதலைக்கு என்ன பங்களிப்பு செய்தார் கள்?தமிழர் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் குரல் கொடுக்க முன் வருபவர் யார்?சுயநல அரசியலுக்காக தவறிழைத்த வாக்குகளுக்காக தூதுவரும் எம்மவர்கள் யார்?

பிக்பொஸ்சில் யாரை சிறையில் அடைப்பது? யாருக்கு எலிமினேசன் கொடுப்பது? யாரைக் காப்பாற்றுவது? உள்ளே சென்று கேள்விகளைக் கேட்கக் கூடியவர்களாக நீங்கள் முன்வர கிடைத்த சந்தர்ப்பமே இத்தேர்தல் வாக்குரிமை. உங்கள் சுயஅறிவைப் பயன்படுத்துங்கள். இருப்பதில் நல்லதைத் தேர்ந்தெடுங்கள்.

## அதிகாரம் இல்லாத அதிபர் பதவிக்கு ஏன் இந்த ஆர்ப்பரிப்பு?

ஜனாதிபதி அதிகாரம் பறிக்கப்பட்டு பிரதருக்கு அளிக்கப்படும் எனப் பல விஞ்ஞாபனங்களல் வெளியிட்ட போதும் அதனைக் குறைக்க இதுவரை முயலாத தால் ஏற்பட்ட விபரீதங்களே 51 நாள் தற்காலிக ஆட்சியாக அமைந்தது. இதனை மீண்டும் கைப்பற்ற முயலும் பல கட்சிகளுக்குள் ஏற்பட்ட ஆசீர்வாதத்திற்கு காரணம் என்ன?

எல்லாம் விஞ்ஞாபனத்துடன் மறந்து விடுவார்கள் மக்கள் என்ற நம்பிக்கை தான். வரவுசெலவு திட்டத்திலும் இதே கதி தான் விலை குறைப்பு சலுகைகள் யாவும் வரவு செலவில் குறிப்பிட்டாலும் அதன் நிலை மாற்றமமைவது நடைமுறையானதால் வரவுசெலவுத் திட்டத்திலும் மக்கள் ஆர்வம் இல்லை. இது போலவே அதிபர் தேர்தலிலும் வரும்போது ஆசைவார்த்தை கூறுவார்கள். வந்தபின் நிறைவேற்ற மறந்து விடுவார்கள் இதற்கு முன்னாள் ஆட்சிகளின் கட்சிகள் புதிய அரசியல் யாப்பு, காணாமல்போனோர், கைதிகள் விடுதலை, தீர்வு, காணி விடுவிப்பு, சர்வமத பாதுகாப்பு, தமிழர் உரிமை மறுப்பு, ஆர்ப்பரிப்புகள் யாவம் தேர்தல் வாக்குறுதிகள் மட்டும் தானா? இதுவே எதிர்வரும் தேர்தலிலும் என்பதனை ஆறுகடக்கு மட்டும் தான் அண்ணன் தம்பி நிலை தொடர்கிறது.

## கல்வி மேம்பட வழி பிறக்குமா?

பாடசாலைகளில் புதிய மாணவர் உட்சேர்ப்புக் கான நேர்முகத்தேர்வுகள் கோட்டத்தில் நடந்து வருகிறது.



அக்கறையுள்ள பெற்றோர் பிள்ளைகளை தயார்படுத்தி நேர்முகப்பரீட்சையில் எதிர்கொள்ளும் மாணவர்களை விட அலட்சியப்படுத்தும் பெற்றோரால் புறக்கணிக்கப் படுவது பிள்ளைகளே என்பதனை எமது கிராம நகர் பொது அமைப்புக்கள், சமயத்தலைவர்கள் சேர்ந்து தமது பகுதிகளில் கவனம் செலுத்தி கல்விக்கான ஊக்கப் படுத்தலை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். மாணவர்களை உள்வாங்கும் பாடசாலைகளும் தூதுவர்களையும் வைத்துப் பணம் சேகரிப்பதில் கவனம் செலுத்துவதும் மறைமுக லஞ்சமாகக் கொள்ள வேண்டும். இதேபோல் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் வாசிப்பு எழுத்தில் கூட முன்நகர்த்த முயலாத ஆசிரியர்கள் மட்டில் கவனம் செலுத்துதல் அதிபர்கள், கல்வியில் ஆர்வமுள்ளோர், பெற்றோர், ஆசிரியர் சங்கத்தினர் கூட இருந்து வருதல் சிறந்த ஆசிரியர்களை வகுப்புக் களை பாராட்டி ஊக்கப்படுத்தும் முகமாக பொறுப்பாக வெளிப்படுத்துவதும் கல்வி மேம்பட வழிபிறக்கும் அல்லவா?

# மதில் மேல் பூனைகளாக..

குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டால் பிள்ளைகள் நிலை என்னவாகும்? இத னால் சிதறிய குடும்பங்களும் பிள்ளை கள் நிலையும் என்னவாகிறது என்பதற்கு எமது நாட்டில் உள்ள குழப்பங்கள் போல வே அரசும், கட்சிகளும் தமக்குள் மோதல் மேற்கொள்வதைப் பார்க்கும் போது எல்லாமே பதவி ஆசைகள் தான். யாருக்கு ஆசை விட்டது? இதனைத் தூண்டுவோரும் முண்டு கொடுப்போரும் தமக்குள்ளே மோதிக் கொண்வது கூட குடும்ப கட்டமைப்பை கட்டிக் காக்க வல்ல தனி மனித சுயலாபத்தைப் பெற பேரப் பேச்சுக்கள் தான் நடைபெறுகிறது. இரவில் கள்ளத் தொடர்பு, பகலில் கற்புக்கரசிக ளாக கட்சிக்குள் தம்மைப் பாதுகாத்து அடுத்த தேர்தலில் தனது பதவியை தக்க வைப்பதே நோக்கம். இவற்றில் பொது அமைப்புக்களோ, மதத் தலைமைகளோ மக்களுக்காக முன்வந்து வழி காட்டாது மௌனித்து இருப்பதும், பின் பக்க தொடர் புகளால் தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்ப துமே தூரநோக்கற்ற மதில் மேல் பூனைக ளின் செயலாக மாறி வருகிறதே யதார்த்தம்.

## வன்மையாகக் கண்டிக்கிறோம்

நீதியை நிலைநாட்டும் நீதிமன்றை அவமதித்தவரான ஞானசார தேரருக்கு பொது மன்னிப்பு வழங்கி பெருமை கொண்ட அரசும், ஜனாதிபதியும் ஏன் விடுதலை செய்யப்பட்டார் என்பதனை இன்றைய நிலையில் பௌத்த, சிங்கள மேலாதிக்கச் செயலால் மீண்டும் நீதித்துறையை அவமதித்து தீர்ப்பை மீறி செயற்பட்ட விடயமே நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் நடந்தேறியவை வெளிப்படுத்தியது.

இந்து ஆலய புனிதத்தை அவமதிக்கும் செயலை மேற்கொண்டது டன், குண்டர்களால் மக்கள் தாக்கப்பட்ட நிலைக்கு பாதுகாப்பு வழங்கியதற்கும் அரசே இதற்குப் பதில் கூற வேண்டும். இதற்காக அழைத்து வரப் பட்ட குரோத மனப்பான்மைகளை கொண்டவர்களுக்கு சகல பாதுகாப்பை வழங்கியதுடன் இன, மத மோதலுக்கு, முரண்பாட்டிற்குக் காரணமானது அரசுக்குத் தெரியாதது ஒன்றல்ல. இதனை மக்கள் தான் நீதி கோர வேண்டியதுமல்ல. இதனைக் கண்டும் காணாது மௌனியாயிருப்பது இன பாரபட்ச செயலாக அரசுக்குத் தெரியவில்லையா?

இதுபோன்ற செயல்களால் பல்வேறு முரண்களை இனமுறுகல் நிலையை தோற்றுவிப்பதுடன் சமாதான, நல்லிணக்க, சகவாழ்வுச் செயல்கள் யாவுக்கும் பின்னடைவை ஏற்படுத்துவதை கண்டும் காணாது இருக்கும் பொறுப்பு ள்ள அமைச்சுக்களும், சர்வமத சமாதான அமைப்புக்களும் மௌனித்து வேடிக்கை பார்ப்பது தான் பொறுப்புள்ளோரின் செயலா? இவை போன்ற நிலைக ளால் இன முரண்பாடுகளுக்குக் காரண மானதையும், நீதித்துறைக்கு மதிப்பளிக் காது அவமதிப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

# யாழ் களரி

Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375

புரட்டாதி - 2019



ROOMS A/C, Non A/C

விருந்தினர் விடுதி

மங்களகரமான

நிகழ்வுகளுக்கான மண்டபம்

இல. 261/2, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0762963944


## முல்லை நீராவியடிப்பிள்ளையார் வளாகத்தில்

# எரிந்தது நீதி, சாம்பலாகியது தர்மம்

யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு

முல்லைத்தீவு நீராவியடிப்பிள்ளையார் ஆலயவளாகத்தில் இடம் பெற்றசம்பவம் தமிழ் மக்களைக் குறிப்பாகஎங்கள் இந்துசகோதரர்களைமிகமோசமாகஅவமானப்படுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளமைஎம்மையெல்லாம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்தவெட்கக்கேடான,அவமானகரமான செயலைச் செய்தவர்கள் குறிப்பாக முன்னர் ஒருதடவை தமது நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்காக சிறைத்தண்டனை பெற்று தமது தண்டனைக்காலம் முடியமுன் ஜனாதிபதியினால் விசேடமன்னிப்புப் பெற்று வெளியேறிய ஞானசாரதேரர் தலைமையில் இன்னுமொரு நீதிமன்ற அவமதிப்பும் இடம் பெற்றுள்ளது.

இந்து மக்களுடைய ஆலயவளாகத்தில் அவர்களதுஆலயதீர்த்தக்கேணியின் அருகாமையில் இறந்த பௌத்த பிக்குவின் உடலம் தகனம் செய்யப்பட்டமையும், நீதிமன்றத் தீர்ப்புக்களை தொடக்கதிலிருந்தே தொடர்ச்சியாக மீறும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இத்துடன் இது ஒருபௌத்தநாடு,தாம் எங்குவேண்டுமானாலும் தங்கள் இறந்தபிக்குகளைத் தகனம் செய்யலாம் என்பதனையும் நீதிமன்றதீர்ப்புதம்மைக் கட்டுப்படுத்த முடியாது என்றகோட்பாட்டையும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பு ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுவதைஉறுதி செய்ய வேண்டிய காவற்துறையினர் நீதிமன்றத்தீர்ப்பை உதாசீனம் செய்பவர்களுக்குப் பாதுகாப்பும் அத்துடன் சட்டத்திற்கு விரோதமான செயற்பாடு அரங்கேறுகையில் அதற்கும் பாதுகாப்பு வழங்கியமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். நீதிமன்றத் தீர்ப்பை விளக்கிஎடுத்துச் சொல்லமுயன்றசட்டத்தரணிகளையும் அவர்களோடு வந்தவர்களையும் தாக்கிக் காயப்படுத்தியமையையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த அடாவடித்தனங்களை அரங்கேற்றியவர்கள்,அவர்களுக்குப் பாதுகாப்புவழங்கியவர்கள் அனைவரையும் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். அப்போதுதான்நீதித்துறையின் சுதந்திரமும், பக்கச்சார்பற்றதன்மையும் பாதுகாக்கப்படும் எனவலியுறுத்திக் கூறுகின்றோம்.


## உங்கள் தெரிவு யாருக்கு?

அரச தலைவர் பதவிக்கு முண்டியடிப்போர் தம்மை ஓர் மீட்பராக அறிமுகப்படுத்தி முன்வரும் காலம் ஜனாதிபதிக்கான தேர்தல் காலம். பலருக்கு இப்போது தான் மக்கள் மீது அக்கறை பிறந்துள்ளது. இதுவரை எதுவும் தெயாததுபோல் குறைகேட்க வருகிறார்கள். பலமுகமூடி மன்னர்களை இனம் காண முடியும் இக்காலத்தில். எமது முற்றங்களில் பாருங்கள்.

பசுத்தோல் போர்த்த புலிகளுக்கு வசதி வாய்ப்புகள் கொடுத்து முண்டு கொடுப்பதற்கும் பல முகவர்கள் தயாராகி விட்டனர். காலத்திற்கேற்ற பலநிற உடைகள் மாற்றியணிந்து பரம்பரையாக நாம் இப்படித்தான் இருந்தோம் என மனப்பதிவுகளை மாற்ற முடியாது வார்த்தைகளால் திணறடிப்பார்கள். பல இளையோர்கள் குடும்பத்தலைவர்களாக மது, போதைவஸ்துக்கு அடிமையாக்கித் தமது காரியங்களை நிறைவேற்றத் துணிந்து செயல்படுவார்கள்.

சிலர் இரவில் ஒரு கட்சி சாராருடனும், பகலில் வேறு வேசம் போட்டு தமது வருவாயை பெருக்கு வதில் கவனம் செலுத்துவார்கள். வாக்குறுதிகளும், ஒப்பந்தங்களும், பேரப்பேச்சுக்களும், கொடுக்கல்வாங்கல்களும், இருட்டுக்குள் நடந்தேறும் மேடைப்பேச்சுக்களும், களியாட்டங்களும் இதுவரை பட்ட காயங்கள், கனவுகள், எண்ணங்கள் கற்றுத் தந்த எமது தேசத்தின் மக்கள் ஏதோ வழிகளில் காயப்பட்ட உள்ளங்களே, இனிப்புப் பண்டங்களாலும், விளையாட்டுப் பொருட்களிலும் மனம் மாற்றுவிக்கும் சிறுவர்களா நீங்கள் என்பதனை மீட்டுப் பாருங்கள்.

(தொடர்ச்சி பக்கம் 09)




## எமது நாட்டில் நல்லாட்சி உருவாக வேண்டுமெனில் புதிய சிந்தனையுள்ள தலைவர்களைத் தெரிந்தெடுங்கள்

### கரித்தாஸ் தேசிய இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க அடிகளார்



(மன்னார் சிறப்பு நிருபர் ராஜன்)

கடந்த 11ம் திகதி வடக்குப் பிராந்தியத்திலிருந்து வருகை தந்த மன்னார், கிளிநொச்சி மாவட்ட சமூக மட்ட அமைப்பு தலைவர்களுக்கு கரித்தாஸ் – இலங்கை தேசிய நிலையத்தில் திறன் வளர்ப்பு பயிற்சி செயலமர்வினை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே இலங்கை தேசிய கரித்தாஸ் இயக்குநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரைநிகழ்த்துகையில் எமது நாடு வெகுவிரைவில் பெரியதொரு தேர்தலை சந்திக்கவுள்ளது. நாட்டு தலைமையை தெரிவு செய்யவுள்ளது. இன்நேரத்தில் மக்களாகிய எமக்கு பாரிய கடமையும், பொறுப்பும் உள்ளது. நாம் நல்லதொரு தலைமையைத் தெரிவு செய்ய வேண்டும். பாரம்பரியமாக ஒரே மாதிரியான கொள்கைகளைக் கொண்ட போலியானவர்க ளையும், போலியான முகத்திரைகளைக் கொண்டவர்களையும் தெரிவு செய்து எதிர்கால சிந்தனைகளை மறந்தவர்களாக நாம் செயற்படுகின்றோம்.


இந்நிலை மாறவேண்டும்.

எமது நாட்டில் குறிப்பாக வடக்கு மக்கள் பெரும் பாதிப்புக்குள் உள்ளனர். இவர்களுக்கான தீர்வுகள் ஏதும் இல்லை, குறிப்பாக காணிப்பிரச்சினைகள், தடுப்பு முகாம்களில் உள்ளவர்களுக்கான விடுதலையின்மை, இவை மட்டுமல்ல ஏராளமான பிரச்சனைகளுக்கு எவ்வித தீர்வுகளும் இல்லை. எனவே இவற்றிற்கெல்லாம் தீர்வு தரக் கூடியவர்களை நாம் தெரிவு செய்ய வேண்டிய தேவையுள்ளது.

எனவே மக்களின் தலைவர்களாக உள்ள நாம் மிகவும் பொறுப்புள்ளவர்களாகவும், மக்களை சரியான முறையில் வழிநடத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

(தொடர்ச்சி பக்கம் 09)

## பாதுகாப்பு யாருக்கு?



பாதுகாப்பு கேள்விக் குறியான நாடாகி விட்டதா எமது நாடு? ஏப்ரல் 21 தாக்குதல் பலரது கைதுக ளால் முடக்கப்பட்டாலும் யாழ்மக்கள் நிம்மதியான பாதுகாப்பான சூழலை அனுபவிக்க முடியாதவர்களாக தினம் தினம் கலக்கமுற்று வாழ்கிறார்கள்.

காரணம் தினசரி தொடர்நாடகங்களில் வரும் செய்திகள் சாதாரண மக்கள் வீதியிலோ, வீட்டிலோ அமைதியற்ற சூழலில் அரசியல்வாதிகள் வருகைக்காக பல அடுக்குப் பாதுகாப்புப் போட்டு குடைபிடிப்போர் நாட்டும் மக்கள் பாதுகாப்புக்கு அலட்சியப்படுவது மனக்கலக்கத்தையளிக்கிறது.

இதற்கு மக்களின் பொறுப்பற்ற செயல்களே காரணமாகும். யாருக்கோ, எங்கோ நடப்பதல்ல எங்கள் வீதிகளில் அயல்வீட்டில் இரவுபகல் எப்போதென்றாலும் நடக்கும் செய்திகள் மட்டும் சில வெளிவரும்.

சாதாரண மக்களைத் தாண்டி சமயத் தலைவருக்கு நடந்தாலும் அது பற்றி அக்கறை இல்லா நிலைக்கு மக்கள் ஒதுங்கி நடப்பதே காரணம். சென்ற வாரம் பாதிரியார் ஒருவரை அணுகிய கும்பல் தனது பிள்ளை நோயில் இருப்பதால் அவருக்கு வேண்டுதல் ஆசீர் வழங்கக் கூறினார். அதனைக் கூட உடன்வரும் படி ஆட்டோவில் அழைத்துச் சென்று பத்தைகள் உள்ள வீட்டில் அவரைத் தாக்கி உடைகளைக் கிழித்து பணம், தொலைபேசியைப் பறித்துச் செல்லும் அளவிற்கு பகலில் வெளிப்படையாக நடந்தேறியது.

சமயத்தலைவருக்கு நடந்ததைக் கண்டவர்கள் முதல் சமயத்தலைமை வரை எதுவித அக்கறையும் இன்றி குசலம் விசாரித்தனரே தவிர மக்களை விழிப்படையச் செய்து பாதுகாப்பைப் பலப்படுத்த

(தொடர்ச்சி பக்கம் 04)

# எம் அனைவருக்கும் சொந்தமான இந்த நாட்டில் நாம் நல்லிணக்கத்தோடுவாழ்வோம்.

மனிதகுலத்தின் மாண்புக்கு, வெற்றிக்கு, எழுச்சிக்கு உரியமார்க்கம் ஒன்றுபடுதலே ஆகும்.

செல்வி டினுறா அன்ரன் அமலதாஸ்
தரம்-II, யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்



எம் அனைவருக்கும் சொந்தமான நம் நாட்டில் நாம் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் நமதுநாட்டைக் கட்டியெழுப்பலாம். இந்தஉலகில் இன்றைய சூழ்நிலையில் யாரும் தனித்துவாழமுடியாது. ஒன்று பட்டஉழைப்பின் மூலமே எச்செயலையும் வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும். சாதி,மதம் பேதமின்றிநாம் அனைவரும் இந்தநாட்டுமக்கள் என்ற நல்ல எண்ணத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்ந்தால் உலகிலேயே சிறந்த நாடாகக் காணப்படும். ஒரு கை தட்டி ஓசைஎழாது. இரு கை சேர்ந்தால் தான் ஓசைஎழும். அது போல மனிதர்கள் இணைந்தால் தான் செயல் சிறக்கும். குடும்பவாழ்விலும் சமூகவாழ்விலும் நல்லிணக்கத்துடன் வாழ்வதுஅவசியமாகும். “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்பது பழமொழி. ஒன்றுபட்டு உழைப்பதன் மூலமே எதனையும் சாதித்துக் கொள்ளலாம். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பர். கூடி வாழ்ந்தால் வாழ்வுசிறக்கும். ஒற்றுமைவளரும்.

அரிதுஅரிதுமானிடராய் பிறத்தல் அரிது என்று மானிடப் பிறவியைப் பெருமைப் படுத்துகிறது. அந்தப் பெருமைக்குரியமனிதன் வாழும் பூகோளம் தான் ஆனந்தத்தின் எல்லை. அந்த ஆனந்தத்தின் வாழ்க்கையை கட்டியெழுப்ப வேண்டிய பாரியபொறுப்புநம் அனைவரினதும் கடமையாகும். நமதுநாட்டில் நடந்து முடிந்த ஒவ்வொரு இனமதபிரச்சினைக்கும் காரணமே நமது நாடு நாம் அனைவரும் ஒரேகுடிமக்கள் என்ற மனப்பாங்கு இல்லாதுநல்லிணக்கத்துடன் வாழாது உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஏழை பணக்காரன், உயர்ந்த மதம் தாழ்ந்தமதம் போன்ற ஒற்றுமையில்லாத மனப்பாங்கே காரணமாகும். எறும்புகள் அனைத்தும் வரிசையாகக் குழுவாக சென்று தமக்குத் தேவையானஉணவைத் தேடுகின்றன. அது போல காகங்களும் தமக்குத் தேவையான உணவைப் பெற்றதும் கூட்டமாத சேர்ந்து உண்ணும். அதுபோலநாமும் நல்லிணக்கத்துடன் பகிர்தலுடன் வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும்.

கறையான்கள் ஒன்றாகச் சேர்ந்து புற்றுக்களை உருவாக்குவது போல நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நம் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். ஆறறிவுபடைத்தவர்கள் நாம் ஆளுமை நிறைந்தவர்கள் நாம் நேசக் கரத்தில் மோசக் கருத்துக்களை புறந்தள்ளி இலங்கை மாதாவின் இணையற்ற புதல்வர்கள் நாம் என்றநேரானசிந்தனையுடனும் உயர்வானமனப்பாங்குடனும் வாழ்ந்தால் நம் தேசத்தை சிறந்ததொரு தேசமாகமாற்றமுடியும். மனிதமனங்கள் இணைந்துவிட்டால் மண்ணில் ஒற்றுமை நிச்சயம். நாம் காணும் சூழலில் பறவைகள் விலங்குகள் மரம் செடிகொடிகள் ஆகியஅனைத்தும் ஒற்றுமையாக இருக்க ஆறறிவு படைத்தமனிதர்களாகிய நாம் ஏன் ஒற்றுமையாக வாழ இயலாது. ஒற்றுமையே வாழ்வின் சிறந்த பண்பாகும். அப்படிப்பட்ட சிறந்த பண்பைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் சிறந்த நிலையைஅடையலாம். அண்மையில் நடைபெற்ற தாக்குதல்களிற்குக் காரணமும் ஒற்றுமையின்மையே. நாம் இந்த உலகில் பிறக்கும் போது தேசமகனாக தேசமகளாகப் பிறந்தோம். நாம் தேசமகனாக மகளாக வாழ்வதன் பெருமையை உணர்த்த நம் தேசத்தை வளர்க்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உரியதே. ஒரு துளி நீர் மட்டும் இருந்தால் நம் தாகம் தீராது. பலதுளி நீர் இருந்தாலே நம் தாகம் தீரும். தாகம் தீர்க்க நாம் பல நீர்த் துளிகளை சேர்ப்பது போல் நம் தாயகத்தைத் தூக்கிநிலைநாட்டநாம் அனைவரும் சேர்ந்திலுத்தல் அவசியமாகும். விபத்துக்கள் ஏற்படும் போது மனிதாபிமானத்துடன் போய் உதவினால் நம் நாட்டிற்குப் பெருமை. ஆனால் மனிதாபிமானமே இல்லாமல் சாதி மத இனப் பாகுபாடு பார்த்தால் நமது நாட்டிற்கே அவமானம். நமது நாட்டிற்கு நாம் அவமானத்தையல்ல பெருமையையே கொடுக்க வேண்டும்.

நல்லிணக்கம் தேசப்பற்றுப் போன்றவை நமது நாட்டை நல்வழிப்பாதையில் நடத்திச் செல்லும். ஒருயுத்த களத்தில் போர் வீரர்கள் ஒன்று சேர்ந்து யுத்தம் செய்யும் போது தான் போர்க்களத்தில் வெற்றியினை ஈட்டிக் கொள்ளமுடியும். அது போல தேசத்தை வளர்க்க வேண்டிய போர்க்களத்தில் நாம் அனைவரும் போர்வீரர்களாக மாறவேண்டும்.
போர்வீரர்களாக மாறி நம் நாட்டைவளர்ப்பதன் மூலம் தான் சிறந்த குடிமக்கள் என்ற பெயரைப் பெற முடியும்.

இந்தியாவின் சுதந்திரத்திற்காக அன்று மகாத்மா காந்தி போராடினார். இன்றுநம்முள் எத்தனை பேர்நமது உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராட முன்வந்திருக்கின்றோம். நாமும் ஒருமகாத்ம்காந்தியாக மாறுவோம். மனதால் இணைந்து மாற்றத்தை உருவாக்குவோம். நாடும் வீடும் சிறக்க ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையே வெற்றிக்கு வழி. நாம் கற்றறிய வேண்டிய முதல் மொழிஅது. சாதி சமய பேதங்களை மறப்போம். சமத்துவம் நிலைத்திட ஒன்றுபட்டு உழைப்போம். ஒன்றுபட்டஉழைப்பின் மூலம் உயர்வு காண்போம் என்பதைநாமும் நன்குணர்ந்து அனைவருக்கும் சொந்தமான இந்நாட்டில் நல்லிணக்கத்துடன் வாழ்வோம்.

# விடுதலை எப்போ?

எங்கள் சிறைக்கைதிகள் விடுதலைக்கு ஏங்கித் தவித்து பத்தாண்டுகள் கடந்துவிட்டது. பல துன்புறுத்தல், உண்ணா நோன்புகள், கைதிகளால தொல்லை, விசாரணைகள் இன்றி விடை காணமுடியாத நிலையில் தவிக்கும் குடும்பத்தின் நிலையுணராத அரசியல் கட்சிகள், அரச நிலைக்கு என்ன காரணம்? குரல் கொடுக்க மாட்டார்கள் என்ற நிலையா?

இதுவரை தீர்ப்புகள் வழங்கப் பட்டிருந்தால் கூட சிறையிலிருந்து மீள சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். பொது மன்னிப்புக்கு இருந்தவர்களுடன் நம் அரச தூதுவர்களும் வருகிறார்கள். எந்த முகத்துடன் முதலைக்கண்ணீர் வடித்து வருகிறார்கள். அவர்கள் செய்யவில்லை, நாங்கள் வந்ததும் செய்து காட்டுவோம் என்பார்கள்.

கஞ்சா, குடு, போதைவஸ்து வியாபாரிகள் சுதந்திரமாக நடமாடுவது வடபகுதியில் தான். அவர்களுக்கு சுதந்திர நடமாட்டம், கஞ்சாப்பாவனைக்கு கூட வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டாச்சு. சுகபோக வசதியுடன் வாழ சந்தர்ப்பமும், கடத்தல் திட்டமிடலும் சிறைக் கூடங்களிலே நடந்தேறுவதாக உயர் அரசியல் தலைவர் வெளிப்படுத்துகிறார். நம்மவர் சிறைக்கூடத்தில் தவமாய் தவமிருந்து விடை காண முடியாத விடுதலைக்காய் ஏங்குவது யாருக்கும் அக்கறையில்லை. பதவிக்காக பல வசதிகளை அனுபவிக்கத் தேடி வருகிறார்கள் கேட்டுப்பாருங்கள்

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தின்

ஏற்பாட்டில்



ஒளிப்படப் பயிற்சி நெறி

ART & DOCUMENTRY PHOTOGRAPHY

ஆறுமாத சான்றிதழ் கற்கை நெறியின் பின்னர் கண்காட்சிகளும் நடாத்துவதற்கான களம் அமைத்துக் கொடுக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:
0762963944

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
இல.261/2, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## பாதுகாப்பு ......

நடவடிக்கை ஆமை வேகத்திலேயே நடந்தேறியது. இது எங்கள் கடமையில்லை. இது பற்றித் தெரிந்தாலும் அவர்களைக் கைது செய்யப் போதை தான் காரணம் என ஒதுங்கி விடுகிறார்கள். இதுவே தென்பகுதி மதத் தலைவர்களுக்கு நடந்திருந்தால் விடுவார்களா? தென்பகுதி மதத் தலைவர்களுக்கு நடந்திருந்தால் சமய, அரசியல், சமூகத் தலைவர்கள் என்ன செயல்களில் குரல் கொடுத்து விரைவு படுத்தி இருப்பார்கள்.

சமயக்கடமை செய்தவருக்கே இந்நிலை என்றால் சாதாரண மனிதர்களுக்கு என்ன நடக்கும் . இதனைப் பாதுகாப்பு கொடுக்கும் எமது அரசநிலையத்தில் இப்படி முறைப்பாடு செய்ய நம்பிக்கையற்ற பாதுகாப்பு நிலை தான் காரணம். எமது நாடு களவுக்கும், கஞ்சாபோதைக்கும் பாதுகாப்பு வழங்குவதில் கறுப்புச்சட்டைக்காரரும், பாதுகாப்புக்குத் துணைபோவோரும் மக்களின் அமைதிக்குப் பொறுப்பாக நடவடிக்கை எடுக்க முன்வராமல் இருப்பது கண்டு சமூக, சமய , அரசியல் தலைமைகள் முன்வருவார்களா? ஐஎஸ் ஐஎஸ் தாக்குதலை விட மோசமானது தினமும் அனுபவிக்கும் நிலை. இன, மத, நிலை பார்த்து பாரபட்சம் செய்யும் சகல தலைமையிலும் பாதிக்கப்படுவது பாமர மக்களே என்பதனை சமய சமூகத் தலைமைகளே விழித்து விடை காண முயலுவீர்களா? அன்றி உடந்தைக்குத் துணை போவீர்களா? மௌனம் கலைவது எப்போது?

யாழ் களரி
Website: yarlgallery.com E-Mail: yarlgallery@gmail.com
Tel/Whats App/Viber: 077 6510375
பிரதம ஆசிரியர்: ஜோர்ச் ஜெஸ்ரின் |
பொறுப்பாசிரியர்கள்: வே.சஞ்சீவதனுசன் | செ.யோசப்பாலா
வெளியீடு மற்றும் தொடர்பு முகவரி: ராகஸ்வரம் கலைமன்றம் |
இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
28/1 A.V வீதி, கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

## போதைப்பொருள் பாவனையும், சவால்களும்

இலங்கையில் இன்று மூலை முடுக்கெல்லாம் பேசுபொருளாகக் காணப்படுகின்ற ஒரு முக்கிய பிரச்சினையாகப் போதைப் பொருள் மாறியிருக்கின்றது. குழந்தைகள், இளைஞர், யுவதிகள், வயோதிபர்கள் வரை எல்லோரும் போதைப் பொருளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் பாடசாலையில் கல்விகற்கும் பச்சிளம் சிறார்களும் போதைப்பொருள் வலைக்குள் வீழ்ந்திருக்கிறார்கள். குறிப்பாக பொழுது போக்கு, சிற்றின்பம், களியாட்டங்களில் கலந்து கொள்ளுதல், கவலையை மறத்தல் போன்ற காரணங்களுக்காக போதைப் பொருட்களைப் பாவித்து அவர்களின் எதிர்கால வாழ்க்கையை சிதைத்து தமது லட்சியத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளனர். இவ்வாறானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உளவள ஆலோசனைகள் வழங்கி புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்களை சமூகத்தோடு இணைக்கின்ற பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் அரசியல்வாதிகள், செல்வாக்குள்ள வியாபாரிகள் எல்லோரும் எந்த தயவு தாட்சணியமுமின்றி சட்டத்தின் முன் தண்டனை வழங்கப்பட வேண்டும். இதைத் தற்துணிவுடன் நடைமுறைப்படுத்தினால் மட்டுமே இலங்கையை போதைப்பொருள் அற்ற நாடாக மாற்ற முடியும். கடந்த மூன்று தசாப்தமாக சிவில் யுத்தத்தை எதிர் கொண்ட இலங்கைத் தேசம் யுத்தம் முடிவுற்ற பின்னணியில் போதைப் பொருள் கண்ணுக்குத் தெரியாத யுத்த மாக வடிவெடுத்துள்ளது. சர்வதேச போதைப்பொருள் கடத்தல் மன்னன் என்று கருதப்படும் இலங்கையைச் சேர்ந்த மாக்கந்துற மதுஸ் அண்மையில் துபாயில் கைது செய்யப்பட்ட பின்னணியில் போதைப் பொருளுக்கு எதிரான யுத்தம் பல வடிவங்களை எடுத்துள்ளது. ஒரு பிரச்சனை பல பிரச்சனைகளாக விஸ்வரூபம் எடுத்துள்ளது.

குறிப்பாக பெற்றோர்களும், ஆசிரியர்களும், மூத்த சமூகத் தலைவர்களும் மிகவும் அவதானமாக இருப்பது காலத்தின் கட்டாயமாகும். போதைப் பொருள் பாவனையை ஆரம்பத்திலே தடுக்கா விட்டால் அதைத் தடுக்கும் நடவடிக்கைகள் சாத்தியமற்றதாகிவிடும்.

திசை மாற்றப்படுகின்ற பிள்ளைகளே பல்வேறு சமூகப் பிரச்சனைகளை உருவாக்குபவர்களாக மாறுகின்றனர். இவர்களே போதைப்பொருள் பாவனை, விற்பனை, கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர், ஈடுபடுத்தப்படுகின்றனர். குறுக்கு வழியில் செல்வம் தேடும் மூலோபாயமாக காணப்படுவதால் தனக்காக வாழ வேண்டியவர்கள் பிறருக்காக வாழ்வைச் சுருக்கும் நிலை காணப்படுகின்றது. இவை வேரோடு பிடுங்கப்பட வேண்டிய களையாகும்.

போதை பாவிப்பவர்களுக்கு சிச்சை அளிக்கும் "நம்பிக்கை இல்ல" இயக்குனர் அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளாரை கொலை செய்யும் நோக்கில் யாழில் இரு போதைப்பிரியர்கள் அவரை கடத்திச் சென்று கடுமையாகத் தாக்கியுள்ளனர். அதிலிருந்து அவரின் ஆன்மீக பலத்தால் அவர் காப்பாற்றப்பட்டு மீளவும் பணியைத் தொடர்கிறார். இவற்றை ஆராய்வதற்கோ தடுத்து நிறுத்துவதற்கோ சம்பந்தப்பட்டவர்களால் முடியாமலுள்ளது. இப்படிப் பல உதாரணங்கள் நிமிடத்திற்கு நிமிடம் பதிவாகின்றது என்பதை சுட்டிக் காட்டுவதோடு குற்றவாளிகளை இயக்குவோரும் வெளிப்படுத்தப்பட்டு நம்பிக்கையூட்டும் செயல்களையுமே பாதுகாப்புத் தரப்பிடமும், பொது, சமய அமைப்புக்களும் செயற்படுத்துவதையுமே விரும்புகிறோம்.

# எம் அனைவருக்கும் சொந்தமான இந்த நாட்டில் நாம் நல்லிணக்கத்தோடு வாழ்வோம்.

செல்வி M.N.F நூஹா
தரம்-II, யா/ஒஸ்மானியா கல்லூரி

உலகம் படைக்கப்பட்டது உயிரினங்க ளுக்காக மனிதர்கள் அவற்றுள் விசேடமாக ஆறறிவு படைத்தவர்கள். மனிதர்கள் உலகத்தில் செய்யும் செயல்கள் நல்லிணக்கத்திற்காகவே என்ற எண்ணம் நம் அனைவரது உள்ளத்திலும் வற்றாத ஊற்றாக உதிக்க வேண்டும்.

இன்றைய கால கட்டங்களில் அறிவுத்திறன் படைத்தோர், சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் அனைவரும் நாட்டில் அமைதியையே விளைவிக்கின்றார்கள். அது மறுப்பதற்கில்லை. ஏனைய சமய இலக்கிய கலைத்துறையிலேயே இருப்பவர்கள் என்ன கூறுகின்றனர் என்றால் "உயர்ந்தவர் என்ன? தாழ்ந்தவர்



என்ன? உடல் மட்டும் சிவப்பாக இருந்தால் அனைவரும் ஒன்று என்று ஆகிவிட முடியாது. பொதுவாக இலங்கை போன்ற தொரு நாட்டினை எடுத்து நோக்குவோமாக இருந்தால் இங்கு வாழ்பவர்கள் பெரும்பான்மை யான அளவு சிங்களவர்கள் வசிக்கின்றார்கள். சிறுபான்மை யான அளவு தமிழர். இதற்கிடையில் முஸ்லிம் கிறிஸ்தவர்கள் வசிக்கின்றார்கள். எது எப்படி இருந்தாலும் இலங்கை பெற்றெடுத்த பிள்ளைகள் என எண்ணினால் நாம் நாட்டில் மத நல்லிணக்கத்தை கொண்டுவரலாம்.

மத நல்லிணக்கம் என்ற ரீதியில் இன்று தத்தமது மதக்கோட்பாடுகளை மட்டுமே முன்வைத்து உரையாற்றுகின்ற போது அங்கு பிளவு மீறப்படுகின்றன. எனவே தான் நாம் அனைவரும் சகிப்புத்தன்மை என்ற ஒன்றை நாம் கடைப்பிடித்து ஒழுக வேண்டியுள்ளது. முஸ்லிம், தமிழர், கிறிஸ்தவர், சிங்களவர் என்ற பிரிவுகள் பார்க்கா மல் அனைவரும் ஒற்றுமையாக இருந்து எமக்குச் சொந்தமான இந்நாட்டில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். வேற்றுமை பாராட்டாத வேறுபாடுகளில் கூறுபடாத ஒற்றுமையே சமூக நல்லிணக் கத்தின் அடிப்படை யில் அந்த அடித்தளத்தில் அமைந்த நல்லிணக்கமே வளர்ச்சிக்கு வழிவகுத்து நாட்டு முன்னேற்றத்திற்கு உதவும்.

எம் நாட்டில் பிறந்த எல்லா மக்களும் ஒரு தாய் மக்கள் அதாவது முஸ்லிம்களால் கூறப்படும் ஆதாம் அலை கிறிஸ்தவ மக்களால் ஏவாள் என்று சொல்லப்படும் கௌவா அலை ஆகியோர் முதன் முதலில் படைக்கப்பட்ட மனிதர்கள். இதனை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டால் நம் நாட்டில் மத நல்லிணக்கத்தை கொண்டுவரலாம்.

இன்று நவீன காலத்தில் உலகாயுத சிந்தனைகளே மேலோங்குகின்றது. உலக நாடுகளில் கூட தீவிரவாதக் குழுக்கள் என பெயர் பொதிக்கப்பட்டவர்கள் அனைத்து மதத்திலும் கலந்து இருக்கிறார்கள். இதே போன்று இனவாதக் குழுக்கள் என்ற ரீதியில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர். எமது நாடான இலங்கையை நோக்கமாக இருந்தால் இங்கு அதிகமான மக்கள் சமாதானத்தை மட்டுமே விரும்புகின்றனர். ஆனால் தமது மார்க்கத்தை அரைகுறையாகப் படித்த சில மார்க்கத்தலைவர்கள் என்ற நாமம் பொறிக்கப்பட்ட கும்பல்கள் பிரச்சனைகளை குறிக்கோளாக வைத்து மத நல்லிணக்கத்தினைச் சிதைக்கின்றார்கள். இதன் மூலம் நாடு குட்டிச் சுவராகி விடும். நல்லவர்களாகவும், பண்பானவர் களாகவும் விளங்கும் அனைத்து மதத்தவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு மதங்களும் நல்ல வழி முறைகளாய் மக்களுக்கு வலியுறுத்துகின்றது. இந்த வகையில் முஸ்லிம் மதம் இதனைப் போதிக்கின்றது. வள்ளல் நபி அவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தினார்கள். நபி பட்டம் பெறுவதற்கு முன்னரே முஹம்மது நபி அவர்கள் அரபி சமூகங்களுக்கு இடையே நிலவிய கருத்து மோதல்களையும் மோதல்களினால் உண்டான விளைவுகளையும் பிறரின் விளைவாய் தோன்றிய பகையையும் நீக்கிப் போக்கி அமைதியை ஏற்படுத்தினார்கள். சுற்றுப்புற ஒற்றுமையால் சூழலைச் சுகமானதாக ஆக்கினார்கள். புனித கஃபாவை புனரமைத்துக் கட்டி ஹஜருல் அஸவத் கல்லைக் கஃபாவில் பதிக்கும் வாய்ப்பை அவர்களுக்கே தரவேண்டும் என்று ஒவ்வொரு குலப்பிரிவினரின் தலைவர்களும் உரிமை கோரி மோதல் உண்டாக இருந்தது. காலையில் முதலில் கஃபாவிற்கு வந்த இளைஞர் முஹம்மது நபி அவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது. ஒற்றமையை ஏற்படுத்தி நல்லிணக்கத்தை உருவாக்க உத்தம நபி அவர்கள் ஒரு துணியில் ஹஜருல் அஸ்வர் கல்லை வைத்து அனைவரும் அத் துணியை பிடித்து கஃபாவில் கல்லைப் பதித்து ஒற்றுமையின் வெற்றியை அந்த அரபியர்களுக்கு புரிய வைத்தார்கள்.

இதனைப் போன்று கிறிஸ்தவசமய மக்கள் புனித நூலாக கருதப்படும் பைபிளில் மத்தேயு 18:21-35 லில் கூறப்படுகின்ற போதனை சகோதரர்களுக்கு இடையில் பிரச்சனை வந்தால் அதை அவர்கள் இருவரும் பேசி சரி செய்து கொள்ள வேண்டும். என்று இயேசு சொன்னதை பேதுரு கேட்டிருந்தார். ஆனாலும் எத்தனை தடைவ இப்படி முயற்சி எடுக்க வேண்டும். என்று தெரிந்து கொள்ள விரும்பியிருக்கலாம். அதனால் அவர் இயேசுவிடம் போய்"எஜமானே! எனக்கு விரோதமாக என் சகோதரன் பாவம் செய்தால் நான் எத்தனை தடவை அவனை மன்னிக்க வேண்டும். ஏழு தடவையா? என்று கேட்டார். மதத்தலைவர்கள் சிலர் 3 தடவை மன்னித்தால் போதும் என்று கற்பித்தார்கள். அதனால் ஒரு சகோதரனை ஏழு தடவை மன்னிப்பதன் மூலம் தான் ரொம்பத் தாராளாமாக நடந்து கொள்வதாக பேதுரு நினைத்திருக்கலாம். ஆனால் மற்றவர்கள் எத்தனை தடவை தவறு செய்தவர்கள் என்று கணக்கு வைத்துக் கொள்ளும் படி இயேசு கற்பிக்கவில்லை. அதனால் அவர் "7 தடவை அல்ல 77 தடவை என்று நான் உனக்கு சொல்கின்றேன் என்று சொல்லி பேதுருவைக் திருத்துகிறார். (மத்.18:22) இவ்வாறு இருவருக்கிண்டயில் ஏற்பாடு பிரச்சினைகளுக்கு கூட 77 தடவைகள் மன்னிப்பு வழங்குமாறு கூறுகின்றார் இயேசு.

இதில் கூறப்படும் விடயத்தை கூட மனிதர் களுக்கு இடையில் ஏற்படும் பிளவுகளை உண்டாக் காமல் நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு என்று நாம் கலுத வேண்டும். ஒரு தனி மனிதன் நல்வழி நடந்தால் அவனைப் பார்த்து அவன் பிள்ளை, மனைவி, சகோதரஉ, சகோதரி இன்றும் அவனைச் சூழவுள்ளவர்கள் மாறுவார்கள் எனவே தான் ஒரு பழமொழி உண்டு. உன்னைப் பார்ப்பதாக இருந்தால் உனது நண்பனைப் பார்க்க வேண்டும் என்பார்கள். எனவே நமது நற்செயல்கள் நமது குடும்பத்தையும் மாற்ற வேண்டும். ஒரு குடும்பம் சீர் திருந்தினால் ஓர் ஊர் திருந்தும் ஊர் மாறினால் நமது நாடு மாறும் என்ற அடிப்படையில் நாமும் ஒற்றுமையைப் பின்பற்றுவோம். அத்தோடு நம்மைச் சார்ந்தவர்களையும் பின்பற்றத் தூண்டு வோம். அப்போது தானாகவே நமது நாட்டில் நல்லிணக்கம் உண்டாகும். சாந்தியும் சமாதானமும் நிலவும் நாடு அமைதி பெறும். இந்த நிலை யை அடைவதற்கு சிறுவயதில் இருந்தே நல்ல ஒழுக்க விழுமியங்கள் உள்ளவர்களாக ஒவ்வொரு தாய் தந்தையும் பிள்ளைகளை மிக்க கவனத்துடன் வளர்க்க வேண்டும். இது ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. பெற்றார் இதை கவனத்தில் கொண்டு கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இந்த கட்டுரையின் மூலம் வலியுறுத்துகின்றேன்.

# சிறுவர் மனப்பதிவுகள்
















### கேடு விளைவிக்கும் போதைப்பொருள்

பேனா பிடிக்கும் கையால் இன்று சிகரட் பிடிக்கும் இளைஞர்கள் மதுவில் மயங்கி தம்மையறியாமலே தம் வாழ்வை அழிக்கும் மூடர்கள். மது அருந்தி வீதியில் வேகமாகச் சென்று நிலை குலைந்து தம் வாழ்வை ஒரு நொடியில் பரிதாபமாக முடித்துக் கொள்வர். போதைப்பொருள் பாவனை நம் சமூகத்தை அழிக்கும் முன் நாம் ஒன்றாக சேர்ந்து போதைப்பொருள் வாழ்வை வளமாக்குவோம்"

பை.ஹரணிசிகா
தரம் 3, யா/வ.நா.மகாவித்தி.

## அரசியல் யாப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமை வேண்டும்



இலங்கை அரசயில் யாப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்பாக தெளிவாக குறிப்பிடப்படவில்லை. எனினும் தற்போது புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கு முயற்சிக்கும் இக்காலகட்டத்தில், உருவாக்கப்போகும் யாப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துவது காலத்தின் வேவையாகும். உயிர் வாழ்வதற்கான உரிமை சரியான முறையில் இதுவரை உறுதிப்படுத்தப்படாமையினால் மனித நேயத்திற்க எதிராகப் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

★ அபிவிருத்தி என்ற பெயரில் மீனவர்களின் மற்றும் விவசாயிகளின் காணிகள் மற்றும் வளங்கள் அதிகளவில் கைப்பற்றப்படுவதனால் தமது வாழ்க்கையை கொண்டு நடாத்த முயற்சிக்கின்ற மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு அதற்கான சந்தர்ப்பங்களும் மறுக்கப்படுகின்றன. அவர்களின் இருப்பிடங்கள் அழிவுக்கு உள்ளாக்கப்படுவதனால் இடம்பெயர்வும் அதிகரிக்கின்றது.

★ சுற்றாடல் கூறுணர்வுமிக்க பிரதேசங்களை கவனத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்ற பாரிய காடழிப்பு, பல்வேறு வகையான மண் அகழ்வுகள் காரணமாக மண்சரிவு மற்றும் அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை அபாய நிலைக்குத் தள்ளப்படுவதோடு ற்றும் இடம்பெயர்வும் இடம்பெறுகிறது.

★ சுத்தமான காற்று மற்றும் குடிநீர் தேவையை கவனத்திற் கொள்ளாது தொழிற்சாலைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளினால் நீர் நிலைகள் அசுத்தப்படுகின்றமை, நச்சுத் தன்மையான வாயுக்களை வளிமண்டலத்திற்கு செலுத்துதல் போன்றவைகளினால் ஏற்படுகின்ற பாரிய சுகாதாரப்பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுப்பதனால் உயில் சேதம்(சிறுநீரக நோய், புற்று நோய் மற்றும் சுவாசப்பை கோளாறு) ஏற்படுகின்றது.

★ எமது அரசியல் யாப்பினுள் இவ்வுரிமை அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொள்ளப் பட்டால் மாத்திரமே எமது உரிமைகள் மறுக்கப்படுகின்றபோது எமக்கு நியாயம் கேட்டு நீதிமன்றத்திடம் குரல் எழுப்ப முடியும் . எனினும் நடைமுறையில் உள்ள யாப்பினுள் உயிர் வாழ்வதற்கான உரிமை எமக்கு இல்லை. எனவே நாம் ஒரே இனமாக இவ்வுரிமை கேட்டு குரல் எழுப்ப வேண்டும்.

★ தமது பிரஜைகளின் உரிமைகளை ஏற்றுக் கொள்கின்ற பல அரசுகள் உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக ஏற்றுக் கொண்டுள்ளன. எமது அயல் நாடான இந்தியா இந்த விடயத்தில் முன்னிலை வகிக்க்கின்றது. நாம் பௌத்த தரிசனம் உட்பட பல நல்ல விடயங்களை இந்தியாவிடமிருந்தே கற்றுக் கொண்டுள்ளோம்.

★ இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உயிர் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக ஏற்று எமது அரசியல் யாப்பின் அடிப்படை உரிமை சட்டத்தின் கீழ் உள்ளடக்கி அதை நடைமுறைப் படுத்துவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என மனித நேயத்தின் பேரில் குரல் எழுப்புகிறோம்.

★ 1950ம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியம் மனித உரிமை தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்தியது. அதன் 2ம் உறுப்புரையில் உயிர் வாழ்வதற்கான மனித உரிமையை வெளிப்படுத்தியுள்ளது.

★ 1966ம் ஆண்டு ஐ.நா. சபையின் பொதுச்சபையானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் 6வது உறுப்புரிமையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் சகல மனிதனும் உயிர் வாழ்வதற்கான உரிமையை விட்டுக் கொடுக்க முடியாத உரிமை அவனுக்கு உண்டு. இந்த உரிமை சட்டத்தினால் பாதுகாக்கப் பட வேண்டும் எவராலும் சட்டத்தை மீறிப் பறித்தெடுக்க முடியாது.

★ மனித உரிமை தொடர்பான அமெரிக்க உடன்படிக்கை 1969ம் ஆண்டு கொஸ்ரிக்காவில் வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட அதே வேளை 23 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் 4ம் உறுப்புரிமையில் ஒரு குழந்தை கர்ப்பம் தரிக்கும் தருணத்திலிருந்து அந்த உரிமை சட்டத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும். எவராலும் சட்டத்தை மீறி அவ்வுரிமையை பறித்தெடுக்க முடியாது.

★ 1982ம் ஆண்டு கடனாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பான சமவாயத்தின் 7ம் உறுப்புரையில் "சகலரும் உயிர் வாழ்வதற்கும், சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்குமான உரிமை உண்டு. எவராலும் இதைப் பறிக்க முடியாத அதேவேளை அடிப்படை நியாயமான ஒழுங்கு விதிகளுக்கேற்ப அமைய வேண்டும்.

பிரஜைகள் அபிலாஷை வலையமைப்பு

நான் உங்கள் **யாழ்களரி** தொடர்ந்தும் வெளிவருவேன்,

என்னை நீங்கள் பலப்படுத்துங்கள், எனக்கான பங்களிப்பு 30/00 மட்டுமே.
இலவசமாக நீங்கள் என்னைப் பெற்றிருந்தால் எனது வங்கிக் கணக்கிலக்கத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை அனுப்பி வைக்கலாம்.

ராகஸ்வரம் கலைமன்றம் – BOC – 80954412

# ஜோதிட விஞ்ஞானம்

ஜோதிர்வித்யாரத்னா V.A சிவராசா B.A,BPhil, Dip.in.Edu
56, அம்மன்வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.:021 222 8708

# திருமணம் ஆயிரங் காலத்துப் பயிர்

விவாகத்தில் வெற்றி பெறுபவன் சுவர்க்கத்தையடைய தோல்வி கண்டவர் நரகத்தைத் தக்க வைப்பார். இந்த ஆயிரங்காலத்துப் பயிரைக் கருகவிடாது காப்பாற்றிக் கொள்வதற்குப் பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கடைப்பிடித்தால் நிச்சயம் அதிர்ஷ்டசாலியாவீர்கள். வெளியூரினின்றும் திருமண நோக்கில் வருபவர்கள் தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வரும் நடைமுறைகளை உதாசீனஞ் செய்து மனம் போன போக்கில் விவாகஞ் செய்யத் தலைப்படுவதினால் மணமுறிவு, கர்ப்பச் சிதைவுகள், குழந்தைப்பேறின்மை, பலதாரத்திருமணம் முதலான நிலைமைக்கு ஆளாகின்றனர். இக்கட்டுரை விவாகத்தில் காலடி எடுத்து வைப்போரை நல்வாழ்க்கையைக் கடைப்பிடிக்க வேண்டி எழுதப்பட்டதாகும். வரம்புகளை மீறாமல் நடப்போருக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். பொருத்தங்கள் உயிர்நாடியாகும். வகுத்துக் கொடுப்பவர்கள் தெய்வமாக போற்றப்படுவர். பொருத்தங்கள் நெல்லிக்கனியாகும்.

### நாகதோஷங்கள்

ஆண், பெண் ஜாதகங்களில் நாகதோஷங்கள் காணப்படின் அவை திருமணவாழ்வில் பிரச்சினைகளைக் கொண்டுவரும் இராகு, கேது கிரகங்களுக்குள் ஏனைய கிரகங்கள் சிக்கி இருப்பது காலசர்ப்ப தோஷம் எனப்படும். மணமக்களின் ஜாதகங்களில் இத்தோஷம் காணப்படின் குடும்ப வாழ்க்கையில் அமைதியைக் குலைத்து இன்பத்தைத் தொலைத்து மணமுறிவிற்கும் வழியேற்படுத்தி விடும். சர்ப்பங்கள் உறையும் நயினாதீவு, வல்லிபுரக்கோயில், புதூர்நாகதம்பிரான் ஆலயம், சீரணிநாகம்மாள், நகுலேஸ்வரர் கோவில், திருக்கேதீஸ்வரம் முதலான தெய்வதிருத்தலங்களுக்குச் சென்று சர்ப்ப சாந்திகள் செய்து வருவதன் மூலம் நாகதோஷங்களின் கெடுதிகள் குறைந்து இல்லற வாழ்வில் சந்தோஷத்தை ஏற்படுத்தும். ஜாதகங்களில் லக்கினத்திற்கு 5ம் இடத்தில் ராகு அல்லது கேது காணப்படின் நாகதோஷம் எனப்படும். கல்வியைச் சீர்குலைத்து கர்ப்பத்தை ஏற்படுத்தாமல் திருமணநாளை பின் தள்ளி மணமக்கள் மத்தியில் பிரிவையும், உறவில் கெடுதலையும் ஏற்படுத்தி விடும். சர்ப்பசாந்தி செய்து வருவதன் மூலம் இத்தோஷத்தினின்றும் விடுபட்டு மகிழ்ச்சிகரமாக குடும்ப வாழ்வினை அனுபவிக்க முடியும். குருசண்டாள தோஷமென்னும் நாகதோஷமும் சிலர் ஜாதகங்களில் காணப்படுகின்றது. குருவுடன் கேது அல்லது ராகு சேர்ந்திருப்பதைக் காட்டும் நிலைப்பாடே இத்தோஷமாகும். ஜாதகங்களில் வல்லமை பொருந்திய குருபகவான் என்ற வியாழனின் நன்மைகளை ஜாதகர் திருமண வாழ்வில் பெறமுடியாதவாறு குருசண்டாள தோஷத்தைத் தக்க வைப்பதே ராகுகேதுக்களின் திருவிளையாடலாகும். வீட்டில் சாமி அறையில் நாகவிளக்கினை ஏற்றி வழிபட்டு வருவதன் மூலம் இத்தோஷத்தின் ஆபத்தினின்றும் விடுபடலாம்.

### செவ்வாய் தோஷங்கள்

மணமக்களின் ஜாதகங்களில் ஜன்மலக்கினம், சந்திரலக்கினம், சுக்கிர லக்கினம் இவற்றிற்கு 2, 4, 7, 8, 12ம் இடங்களில் செவ்வாய் இருப்பின் தோஷமுடையதாகும். இருவருடைய ஜாதகங்களும் தோஷமுடையதாயின் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வினை வாழலாம். பெண் ஜாதகம் தோஷமுடையதாகி ஆண் ஜாதகம் தோஷமில்லாதிருப்பின் ஆணுக்கு கெடுதி உண்டாகும். அதேபோல் ஆண் ஜாதகம் தோஷமுடையதாகி பெண் ஜாதகம் தோஷமில்லாதிருப் பின் பெண்ணுக்குத் தீமைகள் ஏற்படலாம். சில ஜாதகங்கள் செவ்வாய் குற்றமாகக் காணப்பட்டாலும் சில காரணங்களினால் அத்தோஷம் நீங்கப்பெற்று நன்மைகள் உண்டாகும்.

★ செவ்வாய் 1,2,4,7,8,12ம் வீடுகளில் இருந்து அவ்விடங்கள் சரராசிகளாகிய மேடம், கடகம், துலாம், மகரம் ஆகிய இராசிகளாயிருப்பின் செவ்வாயின் தோஷம் நீங்கப்பெறும்.

★ செவ்வாய் 2,4,7,8,12ம் வீடுகளிலொன்றில் தோஷமுடையதாய் இருப்பினும் அந்தச் செவ்வாய் குரு, புதன், சுக்கிரன், பூர்வபக்கத்துச் சந்திரன் ஆகிய இவர்களோடு சேர்ந்திருந்தாலும் அல்லது அவர்களுடைய பார்வையைப் பெற்றாலும் எவ்வித தோஷத்தையும் செய்யாது.

★ தோஷமுடைய செவ்வாய் இராசிச் சக்கரத்தில் ஆட்சிவீடு, உச்ச வீடு ஆியவற்றிலும் அல்லது நவாம்சத்தில் ஸ்வநவாம்சம், உச்சாம்சம் முதலியவற்றில் இருப்பினும் எக்காலமும் தோஷம் தராது.



★ சந்திர, சூரியஇராசிகளான கற்கடகம், சிங்க இலக்கி னங்களில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்தோஷம் செய்யாது.

★ தோஷமுடைய செவ்வாய் இருக்கும் இராசி நாதன் அவர் இருக்கும் இராசிக்கு 1,4, 5, 7, 9, 10ம் இடங்களில் இருந்தால் அச்செவ்வாயால் தோஷமில்லை.

★ செவ்வாய் ஸ்திரராசிகளான சிங்கம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் இருப்பின் தோஷம் தருவதில்லை.

★ செவ்வாய் கிரகமானது ஆண், பெண் ஜாதகங்களில் மிதுனம், கன்னி ஆகிய இராசிகளில் இருந்து இது இலக்கினத்திற்கு 22ம் இடமானால் தோஷமில்லை.

★ செவ்வாய் மேட, விருச்சிக இராசிகளில் இருந்து அது இலக்கினத்திற்கு 4ம் இடமானால் தோஷம் தருவதில்லை.

★ செவ்வாய் மகரம், கடகம் ஆகியவற்றில் இருந்து அது இலக்கினத்திற்கு 7ம் இடமானால் தோஷமில்லை.

★ செவ்வாய் தனு, மீனராசிகளில் இருந்து இலக்கினத்திற்கு 8ம் இடமானால் தோஷமில்லை.

★ செவ்வாய் 2,4,7,8,12ம் வீடுகளிலொன்றில் தோஷமுடையதாய் இருப்பினும் அந்தச் செவ்வாய் குரு, புதன், சுக்கிரன், பூர்வபக்கத்துச் சந்திரன் ஆகிய இவர்களோடு சேர்ந்திருந்தாலும் அல்லது அவர்களுடைய பார்வையைப் பெற்றாலும் எவ்வித தோஷத்தையும் செய்யாது.

செவ்வாய் தோஷம் பற்றிய மேலே காணப்படும் விடயங்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சுபதினங்கள்

"நாள்செய்வதை நல்லவன் செய்ய மாட்டான்" விவாக எழுத்து மற்றும் தாலிபூணல் தினங்கள் அதிர்ஷ்டகரமான நாளாக இருந்தால் மணவாழ்க்கையும் நன்கு சோபிக்கும், அட்டமி, நவமி, எமகண்டம், படுபட்சி தினங்கள், அபரபக்கம், கரிநாட்கள் முதலியன தவிர்க்கப்பட வேண்டும். திருமண எழுத்தின் தினங்கள் கூட்டெண் 4, 5, 8 வரும் நாட்களிலும் மேற்கொள்ள வேண்டாம். 28ம் திகதியில் நடைபெறும் நற்காரியங்கள் நீடித்த பயனைத் தராது. சம்பந்தக்கலப்பு நாளன்று சகுனங்களிலும் நம்பிக்கை வையுங்கள். வாகனம் விபத்துக்குள்ளாதல்/ரயருக்கு காற்றுப் போதல், பூனை குறுக்கே ஓடுதல், எதிரியைக் காணுதல், தும்முதல், தலைவிரிகோலத்துடன் எதிரே வருதல், வாக்குவாதப் படல், மகிழ்ச்சிகரமான நிலையை வெறுப்பாக மாற்றியமைக்கும் வேறு நிகழ்வுகள் ஏற்படல்

### கிரகபாவம்

திருமணப்பொருத்தத்தில் கிரகபாவம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இப்பாவம் பதினாறுவரை வித்தியாசப்படுவது சிறப்பாகும். சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது என்பன லக்கினம், சந்திரன் சுக்கிரனுக்கு எத்தனை புள்ளிகள் வருகின்றன என்பதைக் கணக்கிட்டு லக்கினத்திற்கு 100% சந்திரனுக்கு 50% சுக்கிரனுக்கு 25% எனப்பிரித்தபேறு கிரகபாவ சங்கியையாகும்.

இன்றைய காலகட்டத்தில் கிரகபாவத்தை கருத்திற் கொள்ளாது விவாகத்தை நிறைவேற்றும் முயற்சியில் தரகர்கள் மட்டுமல்லாது பெற்றோரும் ஈடுபடும் கைங்கரியம் காணப்படுகின்றது. மணவாழ்வு ஆரம்பத்தில் நன்றாக இருப்பினும் காலப்போக்கில் கிரகபாவத்தின் செயற்பாடும், தாக்கமும் தம்பதியரைப் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும். அவசரக்கோலத்தில் எடுக்கப்படும் முயற்சி ஆபத்தில் கொண்டு சென்று விடும்.

### யோனிப்பொருத்தம்

திருமணவாழ்வில்.இன்பசுகங்களை அனுபவிக்க யோனிப்பொருத்தம் பிரதான பங்கினை வகிக்கின்றது. வாக்கியம் அல்லது திருக்கணித பஞ்சாங்கத்தில் உங்கள் நட்சத்திரத்திற்குரிய யோனியைப் பாருங்கள் உதாரணமாக மூல நட்சத்திரத்திற்கு "ஆண்நாய்" யோரியாகும். ஒன்றினுக்கொன்று பகை யோனி எவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

குதிரை – எருமை /யானை – சிங்கம்/குரங்கு – ஆடு பாம்பு – கீரி/மான் – நாய்/எலி–பூனை/மாடு– புலி ஆகும்.

### கணப்பொருத்தம்

**தேவகணம்** – அச்சுவினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், அத்தம், சுவாதி, அனுசம், திருவோணம், ரேவதி

**மனுஷகணம்** – பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்தரம், பூராடம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி

**இராட்சதகணம்** – கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம்

பெண்நட்சத்திரமும், புருடன் நட்சத்திரமும் ஒரே கணமாயின் உத்தமம். மனுஷகணமும் தேவகணமுமாயின் மத்திமம், தேவகணமும் இராட்சத கணமுமாயினும், மனுஷகணமும், இராட்சத கணமுமாயினும் பொருந்தாது.

### வசியப்பொருத்தம்

மேடத்திற்கு வசியம் சிங்கம், விருச்சிகம்
இடபத்திற்கு – கற்கடகம், துலாம்
மிதுனம் – கன்னி/கற்கடத்திற்குவிருச்சிகம்
தனு/சிங்கம்– துலாம், கன்னி– மிதுனம், மீனம்/துலாம்
விருச்சிகம் – கற்கடகம், கன்னி, தனு–மீனம்
மகரம் – மேடம், கும்பம் – கும்பம்– மேடம், மீனம்– மகரம்

### குழந்தைப் பாக்கியம்

**பால் உள்ள நட்சத்திரங்கள்** – கார்த்திகை, ரோகிணி, பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அத்தம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம், திருவோணம், பூரட்டாதி, ரேவதி.

**பாலற்ற நட்சத்திரங்கள்** – அஸ்வினி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், அவிட்டம், சதயம், உத்தரட்டாதி.

இருவர் நட்சத்திரங்களும் பால் மரமாகில் அதிக பிள்ளைகளும், இருவர் நாளும் வைர மரமாகில் புத்திரப்பேறு குறைவாகவும், இருவரில் ஒருவருக்கு பால் மரமெனின் குழந்தைப் பலனுண்டு.

### தாலிப்பொருத்தம் (ரச்சு)


**சிரோரச்சு** - மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்
**கண்டரச்சு** - ரோகிணி, திருவாதிரை, அத்தம், சுவாதி, திருவோணம், சதயம்
**நாபிரச்சு** - கார்த்திகை, புனர்பூசம், உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி,
**ஊருரச்சு** - பரணி, பூசம், பூரம், அனுஷம், பூராடம், உத்தரட்டாதி
**பாதரச்சு** - அஸ்வினி, ஆயிலியம், மகம், கேட்டை, மூலம், ரேவதி

ஆண்,பெண் நட்சத்திரங்கள் ஒரு ரச்சுவில் இருந்தால் பொருந்தாது. அவை
சிரோ ரச்சு எனின் புருஷன் மரணம்
கண்டரச்சு எனின் பெண் மரணம்
நாபி ரச்சு எனின் புத்திர நாசம்
ஊரு ரச்சு எனின் தனநாசம்
பாத ரச்சு எனின் தூரதேச வாசம்

### எண்பொருத்தம்

விவாகத்திற்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர் கள், பௌத்தர்களும் எண் பொருத்தம் பார்க்கின்றனர்.
1–4/2–7/3–9/4–1/5–9/6–9/7–2/8–4/9–5
ஜாதகப்பொருத்தத்துடன் எண் பொருத்தமும் அமையின் திருமண வாழ்க்கை சிறப்பாக அமையும்.

# கட்டிட காடாக மாறும் எம்தேசம் பாலைவனமாகுமா?



கட்டிடக் காடாக மாறிவரும் எம்தேசம் நீர், காற்று, சூழல் மாசடைவது பற்றி கவனம் செலுத்தத் தவறுகிறது என்பது நம் சுற்று சூழலை சுற்றிப் பார்த்தாலே புரியவல்லது. பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் பொது அமைப்புக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் எம் தேசத்தின் சுற்றுச் சூழலை புதிய திசையில் முன்னேற்றலாம் அல்லவா?

அரசஉதவி வீட்டுத்திட்டங்களோ, அடுக்குமாடி வீடுகளோ கல்லும், மண்ணும் சீமெந்துக்களால் கட்டிடக் காடாக்க படுகிறதே தவிர அரச தனியார் திட்டமிடலில் அவதானம் செலுத்தத் தவறுவதன் விளைவுகளே. நோய்காவிகளா உருவாக்க ஏற்படுத்த வல்லதாகி வருகிறது.

ஒரு சிறிய அரச வீட்டுத்திட்ட வீட்டிற்கு பத்து மரங்களாவது அழிக்கப்படும். கூரை, கதவுநிலை, தளபாடங்கள் முதல் கட்டிட முன்னாயத்தத்திற்காக காணியில் அழிக்கப்படும் மரங்களுக்கு மாற்றீடு செய்யப்பட அறிவுறுத்தலோ க்ட்டாயப்படுத்தலோ இன்மையால் பாதிக்கப்படுவது எமது சுற்றுச்சூழல், காற்று வளங்களோ, இதை விட அடுக்குமாடி கட்டிடங் களும் அருகில் இருக்கும் வீட்டு சுகாதாரத்துக்குத் தடையாகவும் கட்டிடங்களை கைலஞ்சத்தால் மூடி கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு அழிக்கப்படும் மரங்கள் பல்லாயிரம். எமது தேசத்தை பாலைவனமாக்குவதை யாரும் கவனத்தில் எடுப்பதாக தெரியவில்லை. மாற்றுமரநடுகை திட்டத்திற்காக புதிய கட்டிட சதுர அடிக்கு ஏற்ப மரநடுகை பிற இடங்களில் நடுவதற்கு அதற்கான செலவுத் தொகை அறவிட்டால் அரச, தனியார் காணிகளில் பசும்சோலைத் திட்டத்தை மேற்கொள்ள முடியும் அல்லவா? வெப்ப காலம் வந்தால் புளுக்கம், நோய்கள் பரவ இவை காரணமாகும் அல்லவா?

மின்சாரம் தடைப்பட்டால் வாழமுடியாத கட்டிடவரைஞர்களின் கவனிப்பற்ற குளிரூட்டிகளை நம்பிவாழும் நிலை எதிர்காலத்தில் பல தாக்கத்தைத் தரும் என்பதனைச் சிந்திக்கத் தவறுவது ஏன்?

நீர் எமது வளங்களில் முக்கிய பங்கு வகித்தது. இவை இன்று நீர் மாசடைதலும் வறட்சிக்கும் அதனால் ஏற்படும் நோய்கள் பற்றியும், தூரநோக்கான திட்டமிடலில் இல்லாது நகர, கிராம, பிரதேசசபைக்குள் எல்லாவற்றிற்கும் காரணமாகிறார்கள் என்பதை அமைதி காக்கும் அதிகாரிகள் உணர மறுப்பது ஏன்?

நீர்முகாமைத்துவத்தின் முதல் படியாக நீர்சேமிப்பு தொட்டிகள் இணைந்த வரைபடத்துக்கே அனுமதி வழங்கி ஊக்கப்படுத்தினால் சிறுவீடு முதல் பெரிய அடுக்குமாடிகள் அரச கட்டிடங்களிலும் நீர்சேமிப்பு திட்டத்தை ஊக்கப்படுத்த நடைமுறைப்படுத்தினால் மழைநீர் சேமிப்பு மூலம் ஒரு மாதகாலமாவது சேமிப்பு நீரால் பயனடைய முடியும் அல்லவா? போத்தல் தண்ணிக்கு அடிமையான நிலை ஏன் வந்தது?

இதை விட நீர் மாமசடைவதற்கு தமது கட்டிட மலசலகிடங்கு, கிணறுகளுக்குத் தூரத்தில் அமைத்தாலும் அருகிருக்கும் வீடுகள் கட்டிடங்களே மலக்கழிவுக் கிடங்கும் பாவிக்கப்படும் கிணற்றுநீரும் அருகிருப்பதை உணர மறுக்கும் நிர்வாக கட்டமைப்பு மீள்பார்வையுடன் மாற்றுத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதில் முன் நிற்போர் யார்? உதாரணம்

அயல்வீட்டில் உள்ள மலசல கூடத்தில் பரிசீலித்து பார்த்த ஒரு கட்டிடப் பொறியியலாளர் குங்குமத்தை மலசலகூடத்தில் கொட்டிப் பார்த்தார். அக்குங்குமக் கலவை மறுநாள் தனது கிணற்றின் தண்ணீர் சிவந்திருப்பதை கண்டு திகைத்தாராம். அயல் வீட்டாரின் கழிவு நீரால் நாம் உடல் சுத்தப்படுத்துகையை உணராத நிலைகள் எமது நிலவளம் சுண்ணாம்பு கற்களினால் விரைவாக அடுத்தடுத்த வீட்டுக் கிணறுகளுக்கு செல்வதால் தானே மலக்குழி பல வருடங்களாய்யும் நிறைவதில்லை என்பதனை சுய புத்திமூலம் உணர மறுப்பதால் நோய்களுக்கு மருந்து தேடுவதை விட நோய் வராமல் காப்பது பற்றி செயல்படுத்த திட்டங்களில் செயல்படுத்துவது யார்?

குடியேற்ற கிராமங்கள், வீட்டுத்திட்ட வீடுகள், அடுக்குமாடி கட்டிடங்களால் கட்டிடக் காடாக மாறி வருகிறதே தவிர பசுமைக்கான சுய முயற்சித் திட்டங்கள் இன்மையால் எமது வாழ்வில் எதிர்கால சந்ததிக்கு ஏற்படும் பாதிப்புக்கும் நாமே காரணமாகலாமா?

வீட்டை சுத்தமாக வைத்திருப்பது என்பது எமது முயற்சியால் வீட்டுத்தோட்டங்கள், சுகதேவைக்கான மர தோட்ட சோலைகளாகவும், நீர் சேமிப்புக்கான முன்மாதிரியான செயல்களாலும், பிறர் சொல்ல வேண்டும் எனக் காத்திருக்காது நாமாக முன் வருவோரும், வீட்டை அழகூட்டும் வீட்டுத்தோட்டம் உருவாக்குவோரும் பொறுப்புள்ள நிர்வாகக் கட்டமைப்பினரும் முன்னின்று உழைத்தால் கட்டிடக்காடாக மாறும் எம்தேசம், பாலைவனமாகாது சோலைவனமாக மாற்றி ஆரோக்கிய சமுதாயத்தை உருவாக்கலாம் அல்லவா?

# சனக்கூட்டங்கள் சாதிக்குமா வெற்றியை?

என்ன தில்லை சிரிப்போட வாறீர் ஏதும் நல்ல காரியம் நடக்கப்போகுதோ எங்களுக்கும் சொல்லுமன் என தூண்டில் போட்டார் விசுவாத்தி

அண்ணே யாரு எவரெண்டு தெரியேல்ல எப்பிடி இருக்கிறியள் எண்டு குசலம் விசாரிச்சார் அவரோட இருந்தவையள் பார்த்த எங்கயோ எங்கட ஊரில கண்டவையள் மாதிரித்தான் இருக்கு. வீட்ட வாறதெண்டு சொன்னவையள் ஏதும் சம்மந்தமா இருக்குமோ என தில்லையர் புன்னகைக்குப் புதிர் அவிட்டார்.

தில்ல பொம்பிளயள் வைச்சிருந்தா யார் கதைத்தாலும் சம்மந்தமாத்தான் இருக்கும் அது இல்லை இது பாரு.

அப்ப இது எது அண்ணே என்னவாக இருக்கும். எல்லாம் விஷயத்தோட தான் சிரிக்கினம். இப்பிடி எத்தினைபேருக்கு பதில் சொல்லப்போறாய் தெரியுமே, இடி மின்னல் எல்லாம் மழைக்குத்தான். ஈசல்கள் பறக்கிறதும் மழைக்குத்தான். இப்பதேர்தல்கள் ஈசல்கள் பறக்குது அது தான் தேர்தலுக்கான குசலம் விசாரிப்புக்கள் இனித்தான் இடி, மின்னல், முழக்கமாகப் பலராலும் கலக்குவினம் குழம்பிடாத..

யாரு வந்து என் பயன் அவையளுக்கு இப்ப அரசியல் தொழிலாப் போச்சு. எங்களைப்பத்தி இதுவரை நினைச்சினமா? இப்ப வந்து திரியிறதில என்ன பயன் சொல்லண்ணே!

தம்பி தில்லை எது எப்பிடிஇருந்தாலும் அதை மாற்றிற சக்திகள் தான் உங்கட வாக்குகள் அதை அலட்சியப்படுத்தாம பரம்பரையாக போட்டது? தெரிஞ்சவர் யாரோ? சொன்னவர் எண்டு பாக்காம, சுயவிருப்பத்தோட எங்களை இதுவரை எப்படி கவனிச்சு பிரச்சனைய தீர்த்தவையள் குரல் கொடுத்தவையள் எண்டு எங்கட நிலை மாற்றக்கூடியவையள் என தெரிவு செய்யிறது தான் புத்தி எல்லாம் ஒரே குட்டையில ஊறிய மட்டையள் தானே இதுக்கு முண்டு கொடுக்க வருகிறவையளும் பசுத்தோல் போர்த்திய மிருகங்களாத்தானே இருக்கு?

தம்பி, அண்ணன், உறவு எண்டு முண்டு கொடுக்கிறவையளும் தங்கட சுயநலத்தோட தான்,எப்பிடி தெரியிறது எண்ட கலக்கமல்லோ இருக்கு

இவையள் எல்லாரும் எங்கட நாட்டை சுருட்டினவையளும் கோடுகச்சேரியில குற்றவாளியா ஏறிஇறங்கினவையளுமா பாத்திருக்கிறன், ஏன் உன்ர பார்வைக்கு மனசாட்சியின் படி குற்றத்தில குறைஞ்ச குற்றவாளியாப் பார்த்து வாக்குகளை போடு எண்ட விசுவாத்தியின்ர சொல்லியும் உண்மை உண்டு தானே எண்ட சுந்தரலிங்கம்

கடலை கடை விரிச்ச அன்னம்மா சொன்னது எல்லாரையும் குழப்பிப் போட்டுது.

நான் போனமுறை ஒரு சண்டையும் வேணாமெண்டு எல்லாற்ற சினங்களுக்கும் சமனா




போட்டன் சரி தானே அண்ணே,

இது தானே யாழ்மாவட்ட வாக்களிப்பில தானாம் அதிகமான செல்லாத வாக்காக இருபத்தையாயிரத் திற்கு மேலபோட்டதாம். இது படிச்சவையள் முதல் பாமரர் வரைக்கும் வாக்கு போடத் தெரியாத வாக்காளரால வந்த வினைதான் பாரு.

ஏன் அண்ணே புள்ளடி தானே போட்டம் அதில என்ன பிழையிருக்கு

உன்னில பிழையில்ல எங்கட கட்சியள்ள எதுவும் தங்கட பகுதியில வாக்களிக்கிற முறையள சொல்லிக் கொடுக்காம காகம் கூடு கட்டட்டும் குயில்கள் போல நாங்க முட்டையிடுவம் எண்ட மனப்பான்மையில் இருந்து போட்டுவருவினம் தங்கட இலக்கங்களை சொல்லி வோட்டு போடச் சொன்னா இலக்கத்திற்கு புோட்டதால எந்தக்கட்சிக்கு எண்ட விளக்கமில்லாமலும் செல்லாத வாக்காச்சு இது எல்லாம் படிச்சவையளுக்கே விளங்காம போச்சுது எண்ட கவலை கூட இல்லைத் தானே அண்ணே கட்சியளுக்கு என சுந்தர் சொன்னது கட்சிகளுக்கும் விளங்கேல்ல கொடிபிடிக்கவும் சுவரோட்டி ஒட்டவும் பின்னுக்குத் திரியினமேயொளிய எதையாவது ஒழுங்கா செயல்பட யாரும் இல்லைத்தானே

ஓம் அண்ணே ஓம் எங்கட சனம் இந்தியாவில இலச்சக் கணக்காகவும் அள்ளுப்பட்டு அந்நிய தேசத்தில அகதிகளாகவும் இருக்கு. இதுகளின்ர வாக்குகளுக்கு உரிமை சந்தர்ப்பத்தை ஏற்படுத்த யாரும் முன்வரேல்ல தங்கட வசதி வாய்ப்புகளை பெற எடுக்கிற பேச்சு வார்த்தையளில மட்டும் வறுகி எடுப்பினம். மக்களைப் பற்றி யாரும் கவனிக்கிறதை கோட்டை விட்டிட்டு அடுத்த முறை பார்ப்பம் எண்டு தவணை சொல்லி மட்டும் எங்கடையள் பழக்கப்பட்டிட்டினம் எல்லாம் தனக்குத் தனக்கெண்டா சுளகு படக்குப் படக்கு எண்டதால தானே இந்த நிலை எண்டார் விசுவாத்தி.

மனித உரிமை பேச ஐ.நா மட்டும் சுற்றுலா போய் வருகினமேயொளிய எங்கட வாக்குரிமை சரியா பயன்படுத்திறதில நாங்கள் தான் விழிப்பாய் இருக்க வேணும் பாரு எண்ட தில்லையின் தெளிவு

அன்னம்மா கிழவி சொன்னாள் நானும் கச்சான் கடை விரிச்சு வியாபாரம் செய்யப் போனா என்ன கூட்டம் முட்டிஅலை மோதுது அண்ணே.

இதுகள் இப்ப அரசமட்ட கூட்டம் எண்டா அரச உத்தியோகத்தர்களும் புதுசா வேலை எடுத்தவையளையும் வைச்சு நிரப்பிறது தானே பெரியாக்களின்ர வேலை. அதுகள் பாவம் எதுவும் விளங்காது சனக் கூட்டத்துக்காக வேலை நேரம் வரை தான் நிக்குதுகள். கூட்டத்தில கூட்டத்தைக் கண்டு நம்பிறதால தானே ஏமாத்து வாக்குறுதிகளும், பதவி உயர்வுகளும் நடக்குது. நாய்வேசம் போட்டா குரைக்கிறது நம்ம நாட்டில மலிஞ்சதால கூட்டங் கூட்டமாக செல்ல வாகன ஒழுங்குகள் செய்தாலும் சனம் வருகிறது இல்லை எண்ட கவலை சனம் சேர்க்கிறவையளுக்குத் தான் தெரியும் பாரு எண்டு விசுவாத்தி உண்மையை போட்டுடைத்ததை அரசியல்வாதிகளுக்கு எப்பவும் புளிப்பாத் தான் இருக்கிது

# விடுதலைக்குப் போராடும் ஈழத்துத் தமிழ்மக்கள் 12

## நடைமுறை சொல்லும் பாடம் -12

பரமபுத்திரன்

"சென்றது இனி மீளாது மூடா" என்பது தமிழில் விளங்கும் ஒரு பழமொழி. எனவே கடந்து போனதை நினைத்துப்பார்ப்பதால் எந்தப்பயனும் கிட்டாது. ஆனால் கடந்து வந்த பாதையையும், செய்து முடித்த செயல்களையும் அவதானித்தால் பல நன்மைகள் கிட்டும். இதுதான் அனுபவம் என்பது மட்டுமல்ல இனி செல்லவேண்டிய சரியான பாதையையும் காட்டும். எப்போதும் ஒருமுறை விட்டுவிட்ட தவறினை மறுமுறை விடவே கூடாது. அப்படி விட்டால் அதனை மன்னிக்க முடியாது. மன்னிக்கவும் கூடாது. எங்களது தமிழ் எழுத்துலகம் எப்படி இருக்கின்றது என்பதை நான் முதலிலேயே எழுதியிருந்தேன். விடுதலை தொடர்பான அவர்களின் பார்வை எப்படியானது என்பது வாசிப்பவர்களுக்கு புரியும். ஆனாலும் அது உடனடியாக திருந்தும் என்று எதிர் பார்க்கவும் முடியாது. ஒரு எழுத்தாளனின் எழுத்து மக்களிடம் மாற்றத்தை தரவேண்டும். மாற்றம் என்பது சமூகத்துக்கும்இ அதனை படிப்பவனுக்கும் உதவக்கூடிய நல்ல மாற்றமாக இருக்கவேண்டும். இல்லையேல் அவ்வெழுத்தும் பயனற்றது. அத்துடன் அது நின்று நிலைக்கவும் மாட்டாது. எங்களுக்குத் தெரியாத காலத்தில் எழுதப்பட்டு இன்றும் எம்முடன் கலந்து நிற்கும் எழுத்துகள் அத்தகைய வலுக்கொண்டவையே. அவை வலுவற்ற எழுத்துக்கள் எனின் எப்போதோ காணாமல் போயிருக்கும். கால ஓட்டத்தில் அடிபட்டிருக்கும். உதாரணமாக திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரங்கள், ஒவ்வையார் பாடல்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இதற்கும் மேலாக இவ்வாறான பழைய எழுத்துகள் மூலமான சேதிகளை அடிப்படையாக கொண்டே இன்றும் பலர் எழுத்துகளை வடிக்கின்றனர். எனவே எழுதுவது என்பது மக்களுக்கு சரியான செய்திகளை தரவேண்டும் என்பது என் எண்ணம். மற்றவர்களுக்கு புத்தி சொல்வதை நிறுத்து. நீ சரியானதை செய் என்று சொல்வது என் காதுகளில் விழுகின்றது. இதனை நான் இளமையிலேயே கற்றுவிட்டடேன். காரணம் நான் படித்த பள்ளியின் தலைமை வாசகம் "உன்னை நீ அறி" என்பதுதான். பரவாயில்லை தொடர்கின்றேன். நான் படித்த காலத்தில் ஒரு ஆசிரியர் சொன்ன நகைச்சுவை அல்லது நடைமுறையில் உண்மை என்று சொல்லக்கூடிய ஒன்று. சிலர் பல நல்ல சேதிகளை மக்களுக்கு சொல்வார்கள். அது சற்றுக் கடினமாகவும், பின்பற்ற சிரமமாகவும் இருக்கும். எனவே மக்கள் அவ்வாறான சேதிகளை ஏற்க கடினப்படுவர். பின்பற்ற விரும்பமாட்டார். உதாரணமாக, உண்மையாக இரு,நேர்மையாக இரு, பொய் சொல்லாதே, களவு செய்யாதே, பிறரை ஏமாற்றாதே போன்ற இன்னும் பல சொல்லலாம். ஆனால் தவறான செயல்களை விரைந்து செய்வர் பின்பற்றுவர். அக்கால உதாரணம் கசிப்பு. கசிப்பு



என்பது மனித உடலை பாதிக்க கூடிய பொருட்களை கலந்து, ஊறவைத்து, அடுப்பேற்றி காய்ச்சி வடித்து உருவாக்கப்படும் ஒன்று. அதனை உருவாக்குகின்றவன் விரைவாக மக்களிடையே அதனை பரப்பி நல்ல ஆதாயமும் தேடிக்கொள்வான். அதாவது தனக்கு ஒரு கூட்டத்தையும் உருவாக்கி, அதன் மூலம் பணமும் சம்பாதித்து, சிறப்பாக வாழ்வான். இங்கே பல குடும்பங்கள் கண்ணீரில் மிதக்கும். குடிப்பவன் தன்னையும் அழித்து, தன் குடும்பத்தையும் கெடுத்து, ஒரு சந்ததிக்கே கெடுதியை செய்கின்றான். ஆனால் இது சட்ட விரோதம் மட்டுமல்ல, சமூகத்துக்கு ஒவ்வாத பாதகமான செயலும் கூட. இப்போது சிந்திக்கலாம் நல்லவையா, கெட்டவையா விரைந்து மக்களிடம் சென்று சேரும். எனவே தப்பான சேதிகள் எம்மிடம் நிலைபெறும் அளவுக்கு நல்ல சேதிகள் நிலை பெறுவதில்லை. அதாவது இன்றைய முகநூல் எழுத்தாளர்கள் எழுதும் வசனம் " நீ நேர்மையானவனாக இருக்க வேண்டும் என்று சிந்தியாதே, காரணம் காட்டில் நேரிய மரங்களே முதலில் வெட்டப்படுகின்றன". ஆக அங்கு வேறும் சேதி உண்டு. சீரானவையே நீண்ட பலன் தரும். நான் சிறுவனாக இருக்கும் போது எனக்கும் சிலர் சொன்ன சேதிகள் ஞாபகம். "இந்த உலகத்தில் எல்லோரும் நேர்மையாக வாழ்வது இல்லை எனவே நீயும் நேர்மையாக வாழவேண்டும் என்று சிந்திக்காதே, பணம் உழைப்பவர்கள் சரியான வழியில் உழைப்பதில்லை, எனவே நீயும் எவ்வழியிலும் பணம் உழைக்கலாம்" இன்னும் பல.

( தொடரும்)

---

(7ம் பக்கத் தொடர்ச்சி) **உங்கள் தெரிவு..**

ஏவல்கேட்டுவரும் கோமாளிகளுக்கு தமது சுயநலமே முக்கியமாக இருக்கும். போதை வியாபாரிகளுக்கு இது பொழுதுபோக்காக இருக்கும். சிதைக்கப்பட்ட இளையோரின் உணர்வுகளை, உணர்ச்சிகளை மழுங்கடிக்க மேற்கொள்ளும் ஆசை வார்த்தைகளும், மதிமயங்க வைக்கும் போதைக்குள் விழுத்தி தமது நோக்கத்தை அடைவதில் கவனம் செலுத்துவதே துதுரைக்கும் முகவர்களின் வேலை.

மிக அவதானமாக உங்கள் எதிர்காலம், அடுத்த தலைமுறையினர் வாழ நல்ல தலைமைகளை இனம் கண்டு கொள்ள சுயபுத்தியில் தெரிவு செய்யுங்கள். அலட்சியப்படுத்தாது வாக்களியுங்கள் வாக்கின் பெறுமதியை உணர வைத்து குறை, குற்றம் மக்கள்மீது கொண்டுள்ள அக்கறை, நீதி, நேர்மையாளரை இனம் கண்டு வாக்களியுங்கள்

(7ம் பக்கத் தொடர்ச்சி) **எமது நாட்டில் ........**

குறிப்பாக கிராம மட்டத்தில் உள்ள மக்கள் முதலில் விழிப்படைய வேண்டும். நல்ல சமூகத் தலைவர்கள் உருவாக வேண்டும். உருவாகிய தலைவர்கள் மேலும் பல கிராம மட்ட தலைவர்களை உருவாக்க வேண்டும். இவ்வாறான நோக்கங்களுடன் நாம் செயற்படுவது மிக முக்கியமாகும்.

கரித்தாஸின் வலையமைப்பில் இயங்கும் நாம் எதிர்காலத்தில் சமூக, பொருளாதார, கலை, கலாசார, ஆன்மீக, அரசியல் தொடர்பாக மேலும் விழிப்படைந்து செயற்படுவது அவசியமாகும் எனக் கூறி தமது உரையினை நிறைவு செய்தார்.

மேற்படி இத்திறன் வளர்ப்பு செயலமர்வின் வளவாளராக யாழ் கரித்தாஸ்–கியூடெக் நிறுவன வளவாளர் திரு.ஜோசப்பாலா அவர்கள் மிகவும் சிறப்பாக திட்டமிட்டு வழிநடத்தினார். இச்செயலமர்வில் பங்குபற்றிய மன்னார், கிளிநொச்சி மாவட்ட CSOS உறுப்பினர் தமது பணிகளால் மக்களை விழிப்பூட்ட திடசங்கற்பம் கொண்டனர்.


**முழுநேர பகுதிநேர பணியாளர்கள் தேவை**

| | |
|---|---|
| நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் | – 3 |
| மேற்பார்வை அலுவலர் | – 3 |
| நற்பணி இணைப்பாளர்கள் | – 10 |
| வெளிக்கள பணியாளர்கள் | – 10 |
| நற்பணி இணைப்பாளர்கள் | – 10 |




நாடகம், இசைநிகழ்வு, பல்சமய கருத்தாடல், பத்திரிகை, வானொலி உள்ளவர்கள் முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ தேவை . உழைப்பிற்கேற்ற ஊழியம் வழங்கப்படும்.

CSLMRD

261/2, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு: 077-6510375



பல்சமயக் கருத்தாடல் நிலையத்தின்

**யாழ்கிளையில்**

அங்கத்தவர்களாக விரும்புவோர் பல்சமய, சமூக சேவையில் ஈடுபடுவோர் விண்ணப்பிக்கலாம்

ராகஸ்வரம் கலைமன்றம்
28/1, ஏ.வி வீதி, கொழும்புத்துறை.

# உளக்காயங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டாலே நாம் அபிவிருத்தியைக் காணலாம்



வளர்பிறை நிறுவனத்தில்
யாழ்பிரதேச செயலர் திரு.சுதர்சன்

உளவியல் சார்ந்த ஆற்றுப்படுத்தல் பணிகள் எமது நாட்டில் மிக அவசிய தேவையாகும். இதனை முன்னெடுப்பதில் முன் வந்த பயிற்சியாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே, இதனை முன்னெடுத்து பயிற்றுவித்து ஊக்கப்படுத்தும் வளர்பிறை நிறுவனத்தின் முயற்சி காலமறிந்து செயற்படும் சிறந்த பணியாகும் என யாழ்வளர்பிறை உளவள நிலையத்தில் இயக்குனர் அருட்பணி விஜேந்திரன் தலைமையில் ஆளுமைவிருத்தியும், துணை உளவியலாளர்பயிற்சியையும் நிறைவு செய்து வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்புரை ஆற்றிய யாழ்பிரதேச செயலர் திரு.சுகந்தன் அவர்கள் தெரிவித்தார்.
மேலும் தெரிவிக்கையில் எமது நாட்டில் உளவியல் அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அதற்கான ஆற்றுப்படுத்தலின்றி பலர் நோய்க்காவிகளாக உள்ள நிலையில் அவர்களை ஆற்றுப்படுத்தும் பணியாளர்கள் மிக அரிதாகவே காணப்படுகிறார்கள். இவ் ஆரம்ப கற்கைநெறியில் பங்கேற்றோர் மேற்படிப்புகளை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இத்துறையில் சாதிக்க முடியும். வெளிநாடுகளில் இதனை மேற்கொள்வோரின் பணிக்கு சிறந்த மதிப்பும் வரவேற்பும் உள்ளதை அங்கு சென்ற போது உணர முடிந்தது. இங்கு கட்டிடங்களாலும் உதவித்திட்டங்களுக்காக அக்கறைப்படும் நிலை முதலில் உள, ஆற்றுப் படுத்தலுக்கு முன்னுரிமை கொடுத்தாலே சிறந்த அபிவிருத்தியை அடையலாம். அதனை முன்னெடுப்பதில் சகல தொழில்தேடுவோரும் கற்று வழிகாட்ட முன் வரவேண்டும். கல்வி சான்றிதழ் மட்டும் போதாது என்பதனை உணர்ந்து இது போன்ற துறையினைக் கற்று வருவோராக இருந்தால் மக்களின் உளக் காயங்கள் தீர்வதுடன் எமது சமூகத்தின் முன்னேற்றத்திலும் சிறந்த பங்களிப்பை மேற்கொள்ள முன்வந்தோர் பாராட்டுக்குரியவர்களே என சான்றிதழை வழங்கிப் பாராட்டினார்.
பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் அமதி மாகாணத் தலைவர் அருட்பணி ஜீவேந்திரா போல் உரையாற்றுகையில் எமது மண்ணில் ஏற்பட்ட பல நெருக்கீடுகளில் பாதிக்கப்பட்ட சகல மட்டத்தினருக்குமான உள ஆற்றுப்படுத்தல் பணிகளுக்கு முன்னுரிமை வழங்கிவரும் எமது பணிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து பணித்தளங்களில் முன்னெடுத்ததில் வளர்பிறை நிறுவனத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவைக் காணும் சூழலில் புதிய ஆளுமை விருத்தியும் உதவி உள ஆற்றுப்படுத்தலர்களும் பயிற்சியினை முழுமையாக முடித்து சான்றிதழ் பெறுவதைப் பாராட்டுவதுடன் மகிழ்ச்சி அடைகிறேன்.
இவ்ஆரம்பம் உங்கள் வாழ்வில் மட்டுமல்ல சமூகத்திற்கும் சிறந்த வழிகாட்டுவதிலுமே தங்கியுள்ளது. இத்துறை சார்ந்தவர்கள் மேலும் உயர்நிலையடைய ஆரம்பித்துள்ளீர்கள் அறிவு சார்ந்த சான்றிதழ் மட்டும் முழுமனித ஆளுமையைக் கண்டடைய முடியாது என்பதனை உங்கள் அனுபவப் பகிர்வுகள் வெளிப்படுத்தியது. இன்று தொழில்சார் பணிகளில் ஈடுபடுவோர் உளவியல் கற்றலை மேற்கொள்வோர் உதவிகளை நாடி வருவோருக்கு உள ஆற்றுப்படுத்தி சிறந்த தொடர்பாடல் மூலம் சிறந்த நற்சமூகத்தை உருவாக்கலாம் என்பதனை சகல துறையினரும் உளவியல் அடிப்படை அறிவை வளர்த்து உளக்காயங்களைப் போக்க முடியும் என்பதை உணரப்படுவதால் இவை சார்ந்த ஆர்வம் தூண்டப்பட்டு பயிற்சியை நிறைவு செய்வோர் பாராட்டுக்குரியவர்களே. இதனைத் தூண்டித் துலங்க வைத்த வளர்பிறை இயக்குனரின் அர்ப்பணிப்பு பாராட்டப்பட வேண்டியதே என்றார்.

# புதிய அறுவடைகள் பயன் தருமா?

பட்டதாரிகள் முதல் பள்ளி ஆசிரியர்கள் வரை புதிய முகங்கள், புதிய பணித் தளங்கள் யாவருக்கும் முன் மாதிரியாக இருக்க வேண்டிய முன்னாள் பணியாளர்களின் வழிகாட்டல் மக்கள் துயர் தீர்ப்பதற்கு வழி காட்டுமா?
மக்களின் அவலங்கள் தீர்ப்பதிலும் மாணவர்கள் அறிவூட்டல் பெருகவும் இவ்வாண்டில் புதிய அடைவுகள் கிட்ட தூர நோக்குத் திட்டங்கள் மதிப்பிட வழி பிறக்குமா? எதிர்பார்க்கும் மக்களுக்கு ஏமாற்றாமல் நம்பிக்கையூட்டலே நல்ல முன் மாதிரியாகும்.
அரசியல் தலைவர்கள் யாழ் வருகைக்காக சனக்கூட்டத்திற்கு பயன்படுத்தி வரும் அரசஉத்தியோகத்தர்கள் மனநிலை சிதறடிக்கப்பட்டு இவை பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகிறதா? என்பதையே வெளிப்படுத்துகிறது.
ஆரம்பமே இப்படி என்றால் அடுத்த தேர்தல் காலம் என்னவாகுமோ? அடிக்கல் நடுகையுடன் சுவரொட்டிகளுமே மிஞ்சப் போகிறதா? வாக்குறுதிகள் மறந்து விட்டதை மக்களே நினைவூட்டப் பல வழிகள் உண்டு. மறந்ததை நினைவூட்ட இதுவே சந்தர்ப்பம். மக்கள் என்ன ஏமாளிகளா? கோமாளிகளா? நினைவூட்டுங்கள்.

## நாம் நல்லிணக்கத்தோடு வாழ்வோம்.

M.A.F செல்வி A.W.பாத்திமா ஹனா
தரம் 07. யா/வைத்தீஸ்வரா கல்லூரி.

வீறு நடை கொண்டிங்கு வாழ்ந்தோம்
வீம்பாகிப் போனதுவே வாழ்க்கை
நாம் பிறந்த மண்ணிலே சொந்தங்கள்
நாடு வளம் பெற வாழ்த்தொன்று
பாடுங்கள்

நல்லிணக்கம் மனதோடு புதையுண்டு வாழ
நற்பேறும் பெற வேண்டும், சகல இன
மக்களும்
புது யுகம் படைத்திடவே புறப்பட்டோம்
புண்பட்ட மனங்களின் வலி
ஆற்றிடுவோம்.

சோதனைகள் எமை வந்து சூழ்ந்த போதும்
சோர்ந்து போன மனதில்லை எப்போதும்
சுற்றமும் பழி சொல்லக் கேட்கின்றோம்
சுதந்திரம் எம் நாட்டின் பொது வரமே

எம் அன்னை தந்த இந்நாடு
எழுதுவோம் பேனாமுனையில் இதன்
அற்புதப் பொன் ஏடு
ஒற்றுமையே பலம் என நாம் கண்டோம்
ஒன்றுபட்டு வாழ்ந்திங்கு வழி
காட்டுவோம்.

மனித மனங்கள் ஒன்றுபட உழைப்போமே
மறுபடியும் ஓர் இன்னல் தாங்க
இதயமில்லை
அர்த்தமில்லா வாழ்வினிலே ஏன் குரோதங்கள்
அத்தனையும் இரும்பாகிப் போன
வேதனைகள்

அன்போடு நல்லிணக்கமாய் வாழ வழி
பிறக்கனும்
அறிவோடு நல்லொழுக்கமும் காத்து
வாழப் பழகனும்
என்றுமே வாழ்க்கையில் உயரணும்
எல்லா மதமும் ஒன்றுபட உழைக்கனும்.

செல்வன் ரவிச்சந்திரன் சுபாங்கன்
தரம்-10, யா/மத்தியகல்லூரி

நம் நாட்டின் பேரு – இது
எங்கள் தேசம்
என்றுநீயும் பாடு – இது எங்கள் தேசம்

இனங்கள் அனைத்தும் இணைந்து
பன்மொழிகள் பிணைந்து
நாட்டின் பெருமைபுனைந்து
நல்லவற்றை இணைத்து
இலங்கையர் என்றகௌரவம் காப்போம்.

பாரதம் கூறும் சீதையின் நினைவும்
ராவணன் கொய்தபாறையின்
வடிவமும்
சிகிரியா குன்றின் ஓவியஅழகும்
சிங்கவனத்தின் இயற்கைவளமும்
கொண்டஎம் தேசம் – எமதுதேசம்

நான்கு மதச் செழிப்பும்
உண்டான பண்டிகைகளும்
நல்லிணக்க வழிபாடுகளும்
ஆசியாவின் ஆச்சரியத்தை
நம் தேசம் விளக்கும் –
இணக்கப்பாடான தேசம்

கடல்வளம் சேர்க்கும் வலியோர் உழைப்பும்
வயல்வளம் காணும் உழவர் உயர்வும்
தொழில்வளம் சேர்க்கும் தோழர்கள் வாழ்வும்
தொழில்நுட்பத்துறையில் அறிஞர்கள்
வனப்பும்
கொண்டது எங்கள் நாடு – இது அன்னைதேசம்

ஆசியாவின் ஆச்சரியமாக
காசினியெங்கும் காட்சிகளாக
நாம் ஒன்றுசேர்ந்து தவழ்ந்திடவேண்டும்.



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு குறும்பபப் போட்டி

"சிறுவரிலிருந்து வாசிப்பு "

எனும் தலைப்பில்
3 – 4 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்

ஒக்ரோபர் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் அனுப்பி சிறந்த பரிசை வெல்லுங்கள்.
பங்குபற்றும் சகல படைப்புக்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்

அனுப்ப வேண்டிய முகவரி
yarlgallery@gmail.com

நாட்டில் வாழ்கின்ற சிறுபான்மையினரின் மத்தியில் அபிவிருத்தி பாதையில் தடைக்கல்லாக உள்நாட்டு அரசியல் அதிகாரம் ஐக்கிய தேசிய கட்சி சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பிரதான கட்சிகளுக்கு இடையே மாறி மாறி ஆட்சிக்கு வருவது ஜனநாயக நோக்கில் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் பொருளாதார அபிவிருத்திக்கு இது சாதகமாக இல்லை என்றே குறிப்பிடலாம்

சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லீம்கள் என இனரீதியான பிளவினையும் சிங்களம் தமிழ் என்ற மொழி ரீதியான பிரிவினையும் வடக்கு, கிழக்குமலையகம், கண்டியர், கரையோரத்தினர் என்ற பிரிவினைகளும் மதம் போன்ற விடயங்களும் உள்நாட்டு அரசியலில் காலத்துக்குக் காலம் மாறிவரும் பொருளாதார அபிவிருத்தி வாழ்க்கைத்தர முன்னேற்றம் என்பதை விட சமயம் இனம், மொழி, என்பவற் றின் ஊடாக ஆட்சிஅதிகாரத்தினை தொடர்ந்து சிறுபான்மை மக்கள் மேல அபிவிருத்தி பாதையில் உள்நாட்டு அரசியல் சூழலானது தடையாக உள்ளது.

நிதி சுற்றுலா அபிவிருத்தி மாகாண அபிவிருத்தி நகர திட்டமிடல் சுகாதாரம் போசாக்கு சுதேச மருத்துவ தொழில்துறை அபிவிருத்தி உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி கைத்தொழில் வாணிப அலுவல்கள் நீண்ட காலம் இடம்பெயர்ந்துள்ளவர்களின் பெயர்கள் இந்த வீதிகளின் பெயர்கள் மாற்றுவது அரசின் திட்டமிட்ட செயல் அதற்கு தமிழ் அரசியல தலைமைகள் உடந்தையாக இருக்கின்றார்கள் இலங்கையில் அரசு பாரிய இனவாதத்தை தூண்டிவிட்டுக் கொண்டு தமிழர் வாழ் இடங்க ளில் பாதுகாப்பு என்று பெயரில் இராணுவ முகாம்களும் ஊருக்கு ஊர் இருக்கின்றது மக்களின் வாக்குரிமையை பெறுவதற்காக நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியை நோக்காகக் கொள்ளாது குறுங்காலத்தில் மக்களை மகிழ்வித்து தமது வாக்கு வங்கியைப் பயன்படுத்தி அதிகாரத்தை கைப்பற்ற முயன்ற அரசியல் வாதிகள் இலங்கையை ஒரு பௌத்த நாடாக மாற்றுவதில் அதிகமான அக்கறை கொண்டுள்ளனர் .

மாணவர் சமூதாயத்தினை கல்வி அறிவில் முன்னேற்று தல் அவர்கள் எதிர்கால ஆளுமையும் திறனும் கொண்ட வர்களாக உருவாக்க வேண்டிய இலங்கை அரசு தமிழரு டைய கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக தரப்படுத்தல் என பின்னால் இன முரண்பாடு இனவாத அரசியல் செறிந்ததுள்ளது

ம்திகதி ஆடி மாதம் ம் ஆண்டு வடமாகாணத்தை அபிவிருத்தி பாதையில் முன்கொண்டு செல்வதற்கு ம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் அபிவித்தி அடைந்த நாடுகள் என சொல்லப்படும் லண்டன் சுவிஸ் பிரான்ஸ் ஜெர்மனி அவுஸ்ரேலியா டென்மார்க் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களிடம் பெருந் தொகையான நிதி பல நிகழ்வுகளுக்கூடாக சேர்க்கப் படுகின்றது இந் நிதி பயன் பாட்டின் செயற்திட்டங்கள் என்ன என்பது கிராம மட்டங்களில் உள்ள கிராமிய அமைப்புக்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இவை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பது குறித்து புலம் பெயர் தேசத்தில் உள்ள மக்கள் ஈழத்தில் உள்ள மக்களின் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் சேவை செய்கின்றார்களா என சந்தேகம் எல்லார் மத்தியிலும் உள்ளது.

புலத்தில் சங்கங்கள் அமைப்புக்கள் தனிநபர்கள் நலன்விரும்பிகள் பழைய மாணவர் ஒன்றியங்கள் தன்னார்வத் தொண்டர்கள் சிறு குழுக்கள் ஒன்றிணைந்து

# சிந்தனையில் மாற்றம் ஏற்படும்போது சமூகமாற்றம் சாத்தியப்படும்

- நிலவன் -

மீள்குடியேற்றம் கூட்டுறவு அபிவிருத்தி தொழிற்பயிற்சி திறன்கள் அபிவிருத்தி கைத்தொழில் கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் கடற்றொழில் நீரகவள மூல அபிவிருத்தி நெடுஞ்சாலைகள வீதி அபிவிருத்தி பெற்றோலிய வளஅபிவிருத்தி பொது நிருவாகம் அனர்த்த முகாமைத்துவ கிராமிய பொருளாதார அலுவல்கள் காணி பாராளுமன்ற மறுசீரமைப்பு வீடமைப்பு நிர்மானத்துறை கலாசார அலுவல்கள் போக்குவரத்து சிவில் விமானசேவைகள் சமூக அபிவிருத்தி மகளிர் சிறுவர் அலுவல்கள் உலர வலய அபிவிருத்தி நீதி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு கல்வி தொலைத்தொடர்புகள் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு விளையாட்டுத்துறை அமைச்சர் தேசிய ஒருமைப்பாடு அரசகரும மொழிகள் சமூக முன்னேற்றம இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தொழில் தொழிற்சங்க உறவுகள் சமூக வலுவூட்டல் அபிவிருத்தி திறமுறை சர்வதேச வர்த்தகம் போன்றவற்றில் பெரும்பான்மை மக்களை அரச அதிகாரி களாக்கி நாட்டின் தேசியத்தை சிங்களத் தேசியமாக மாற்றுகின்ற கொள்கை கொண்ட தமிழர்களை அமைச்சர் களாகவும் அரசியல் வாதி பௌத்தத்தினையும் அவர்கள் சார்ந்த பெரும்பான்மை இனத்திற்கும் ஆதரவு நல்கிறாரோ இத்தகைய தமிழ் தலைவர்கள் உயர்நிலையில் வைத்து போற்றப்படுகின்றனர்

இலங்கையின் சிறுபான்மை மக்களுக்கு அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட போதும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ஜனநாயக சுதந்திரம் காணப்படுகிறது போரின் பின்னர் தற்காலத்தில் தமிழர் தாயகத்தில் வடக்கு கிழக்கு மாகாணங் களில் பௌத்த மதப்பரம்பல் சட்டவிரோத தொல்பொருள திணைக்களத்தின் உதவியுடன் புத்தர் சிலைகளின் பரம்பல் அதிகமாக உள்ளது வடக்கு கிழக்கு நோக்கிய பௌத்தத்தின் நகர்வில் ஒன்றாகவே பௌத்த மதத்தினைப் பரப்பும் வகையிலே சிங்கள மக்கள் அற்ற தமிழர்கள செறிந்து வாழும் பிரதேசத்தில் இனவாதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பௌத்த துறவிகளின் அத்துமீறி அமைத்திடும் புத்தர் சிலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

தமிழர்கள் செறிந்துவாழும் பல பகுதிகளில் தமிழ்மக்களுக்கு சொந்தமான பலகாணிகளை அபகரித்து ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றங்கள் வருகின்ற பகுதிகளிலும் அபகரித்து ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள படையினரின் ஒவ்வொரு முகாம்களிலும் புத்தர் குடியேறியுள்ளார் மக்கள் பரம்பரை யாக வாழ்ந்த வாழ்வியல் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது அவ்வாறான ஒரு உள்நாட்டு அரசியல் சூழலானது இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதற்கு தடையாக உள்ளது

உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறிய நிலங்களை சிங்கள மயமாக்கி புத்த விகாரைகள் அமைத்து பௌத்த பூமியாக்க மாற்றிட முனைகின்ற செயற்பாட்டினை செய்து வருகின்றார் கள் தமிழ் மக்களின் தனித்துவ குடிப் பரம்பலை மாற்றுவதற்கு தமிழ் மக்களின் குடியிருப்புகளுக்கு இராணுவத்தினர் தமிழ் கல்வியலாளர்கள் துறைசார் அனுபவஸ்தர்களின் திட்டங்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளும் முகமாக கௌரவ ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் எண்ணக் கருவிற்கமைய வடமாகாண வட்ட மேசை கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது

இதில் தற்போது மாகாணசபை கலைக்கப்பட்ட பின் கல்வி அமைச்சின் அனைத்து பொறுப்புக்களும் ஆளுநர் கைவசம் இருக்கும் நிலையில் அதனைவிட மாகாண சபைச் சட்டங்களின் படி நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள அனைத்தும் ஆளுநரிடமே வழங்கப்பட்டுள்ள நிலையில் வடமாகாணத்தின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டிய அதிகாரியான கௌரவ ஆளுநரே பொது வெளியில் வடக்கில் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கடமையாற்றுவதாக தனது வினைத்திறன் இன்மையினை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளமை வரவேற்கத் தக்க விடயமாகும் இருப்பினும் பல பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் பல ஆண்டுகளாக இயங்கிவரும் பாடசாலைகளும் உண்டு என்பதையும் நினைவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது அரசியல்ரீதியான பிரச்சினைகள்ஒருபக்கம் இருக்கின்ற நிலையில் சமூக பொருளாதார ரீதியில் அபிவிருத்தி என்ற தொனிப் பொருள் இன்று பரவலாக பேசப்பட்டு வரும் ஒரு விடயமாக இது காணப்படுகின்றது.

போருக்குப் பின் வட கிழக்கில் மக்கள் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் பற்றிய பொதுப்படையான பார்வையுடன் நாட்டில் வாழும் மக்களின் வரலாறு மரபுகள் சமூக அமைப்பின் பன்மைத்தன்மை அரசியல் கலாசாரம் சிவில் சமூகத்தின் விழிப்புணர்வு மக்களின் அரசியல் பங்கேற்பு பாதுகாப்பு அரசியல் உரிமைகள் கௌரவம் மற்றும் கல்வி முதலான அம்சங்கள் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது .நுண்நிதி கடன் நிறுவனங்கள் ஏராளமான வட கிழக்கில் உதயமாகி உள்ளது இந்நுண் நிதி கடன் நிறுவனங்களில் கடன் பட்ட மக்கள் பலர் பாதிப்படைந்துள்ளனர் கடன்களை பெற்ற பெற்றோர்கள் கடன் வசூலிப்பளர்களுக்கு பயந்து வீடுகளை விட்டு தலைமறைவாக வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். குடும்பப் பிளவு ஏற்படுகிறது இதனால் பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டு அவர்கள் சமூகத்தில் பாரிய சவால்களையும் இன்னல்களையும் எதிர்நோக்கிவருகின்றார்கள கடன் பெற்ற பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரும் செயற்பாடுகள் வெகுவாக அதிகரித்து காணப்படுகிறது பெண்கள் உடல் உள ரீதியாக வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் ஒரு சாரார் கடன் காரணமாகவே தற்கொலை செய்து வருகின்றார்கள்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில் அபிவிருத்திக்கு பயன் படுத்தியிருந்தால் தனிநபர், குடும்பம், கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் என இன்று பல அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்த்திருக்க கூடியதாக இருந்திருக்கும் உள்நாட்டுப் போரினால் காவுகொள்ளப்பட்ட உறவுகள் கொண்ட குடும்பங்கள் அதிகம் கந்தகத் துவள்களைச் சுமந்து வாழ்பவர்களும் ஆதரவற்று தனித்து விடப்பட்டவர்கள் உட்பட அனைவரது தேவைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது காலத்துக்குக் காலம் எமது உறவுகள் அடுத்த வேளை உணவுக்கு காத்திருந்து கையேந்தி நிற்க வேண்டிய தேவை இருந்திருக்காது

உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் இருந்து பல வாழ்வாதார உதவித் திட்டங்களை தனிநபர்கள் குழுக்கள் நிறுவனங்கள் செய்து வருகின்றார்கள் அவர்களுக்கு நன்றி கூறுகின்ற அதேவேளை சில வாழ்வாதாரத் திட்டங்கள் தோல்வியில் செல்வதையும் சுட்டிக்காட்ட வேண்டும் வவுனியா வடக்கு கனகராயன்குளம் பகுதியில் கணவன், மனைவி இருவரும் பல ஆண்டு காலம் போராளியாக இருந்த குடும்பத்தைச் சார்ந்த வர்கள் அவர்களில் 2009ம் ஆண்டு பாதுகாப்பு வலயத்தில் இலங்கை இராணுவம் நடத்திய இனப்படு கொலையில் கணவன் இறந்து போக மூன்று பிள்ளைகளுடன் தோட்டம் செய்வதற்கு உகந்த சொந்த நிலப் பரப்புடன் வாழ்ந்து வந்த அந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கு வாழ்வாதர உதவி செய்திருந் தார்கள். அதில் ஒரு அமைப்பு எதுவித பயிற்சி அனுபவமும் இல்லாத இக் குடும்பத் தலைவிக்கு தையல் இயந்திரம் வழங்கியி ருக்கின்றார்கள். மீளவும் என்னுமொரு அமைப்பிடம் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்யுமாறு விண்ணப்பம் செய்திருந்தார். கள விஜயம் மேற்கொண்டு பார்த்தபோது தோட்டம் செய்வதில் ஆர்வத்துடன் சிறு வீட்டுத் தோட்டம் செய்து வரும் அவருக்கு முன்னர் ஒரு புலம் பெயர் அமைப்பு வழங்கிய தையல் இயந்திரம் வீட்டின் ஒரு மூலையில் மூடிக் கட்டி இருந்தது ஏன் இவ்வாறு உள்ளது என வினாவியபோது தையல் தெரியாது என்பதைக் கூறியிருந்தார்.



சட்டத்தரணி T.M அன்ரனிப்பிள்ளையின் Daily English எனும் நூல் வெளியீடு புனித பத்திரிசியார் கல்லூரி உபஅதிபர் அருட்தந்தை திருமகன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதல் பிரதியை பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தருமான என்.சண்முகலிங்கன் பெற்றுக் கொண்டார். யாழ்.மாநகர முதல்வர் இம் மானுவேல் ஆனல்ட், எழுத்தாளர் ஜோசப்பாலா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நிகழ்வின்போது.


## ராகஸ்வரம் கலைமன்றத்தின் கலை, கல்வி வகுப்புக்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

ராகஸ்வரம்

**துணைப்பாடங்கள்**

ஓகன்,
ஆர்மோனியம்,
ஒக்ரோபாட்,
றம்ஸ்,
கொங்கொட் றம்ஸ்
கிற்றார்,
மிருதங்கம்,
தபேலா,
வயலின்,
வீணை,
புல்லாங்குழல்,
வாய்ப்பாட்டு,
நடனம்,
ஓவியம்

**சிறப்புப் பாடங்கள்**

யோகாசனம்,
நாடகமும் அரங்கியலும்,
ஆயுர்வேத மருத்துவம்,
ஊடகவியல்,
ஆங்கிலம்,
சிங்களம்,
போட்டோகிராபி,
முரண்பாட்டு நிலைமாற்றக் கற்கைநெறி

தரம் 01 – 04 வரையான மாணவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி

தரம் 05 முதல் 10 வரையான மாணவர்களுக்கான தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், கணனி வகுப்புக்கள்

**G.C.E O/L** மாணவர்களுக்கான சகல பாடங்களும் துறைசார்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப் படும்.

**பயிற்சி நடைபெறும் இடங்கள்**

யாழ்பஸ் தரிப்பு நிலையத்திற்கு அண்மையில்

இல.261/2, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
மற்றும்
இல.28/1, ஆ.வ வீதி, கொழும்புத்துறை.

தொ.பே.இல.077–6510375, 076–2963944








ராகஸ்வரம் கலைமன்றத்தின் விழிப்புணர்வு நாடகங்களான "சிறுவர் பாதுகாப்பும் போதை தவிர்ப்பும்" எனும் நாடகம் குருநகர் அண்ணா சிலை முன்றலிலும், மற்றும் "பாதுகாப்பான புலம்பெயர்வு" எனும் ஆற்றுகை கியூடெக்கரித்தாஸ் அனுசரணையுடன் பாசையூர், சுன்னாகம், அந்தோனியார் வளாகத்திலும் அண்மையில் அரங்கேற்றப்பட்டது. தொடர்ந்து ஏனைய பிரதேசங்களிலும் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.


இப்பத்திரிக்கை யாழ்களரி நிறுவனத்தால் சுன்னாகம் கே.கே.எஸ் வீதியிலுள்ள முத்து பிறின்டேர்ஸ் நிறுவனத்தில் 01.09.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.